உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 33 | பிரமாதீச – பங்குனி – 10—4—74 | இதழ் 5

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## கடவுட் கொள்கையும் நல்லொழுக்கமும்

### கடவுள் கொள்கை பற்றி :

நுண்ணறிவும், விரிந்த மனப்பான்மையும் உடையவர்களாகத் தம்மை நினைத்துக்கொள்கின்ற சிலர், 'மக்களிடையே அன்றாட வாழ்வில் காணப்பட வேண்டிய நல்லொழுக்கத்தை வற்புறுத்த வேண்டுமே தவிர, காணப்படாத கடவுளைப்பற்றியும், அவரது பெருமைகளைப் பற்றியும் சொல்லிக்கொண்டிருக்க வேண்டியதில்லை' என்று நினைப்பர்; சில வேளைகளில் அவ்வாறே பேசவும் செய்வர். இது, 'மக்கள் வாழ வேண்டுவதற்குத் தேவையான வீட்டை அழகாகவும், நல்ல அமைப்பாகவும் கட்ட வேண்டுமே தவிர, அதற்கு அடிப்படையைப் பல

மாகப் போட்டுக்கொண்டிருக்க வேண்டுவதில்லை' என்று சொல்வது போலாகும்.

## அடிப்படையில்லாத கட்டிடம் :

'கட்டின வீட்டிற்குக் கல்வி சொல்வது' என்பதுபோல, கட்டிடந்தான் பலரது பாராட்டுதல் அல்லது குறைகூறுதலுக்கு ஏதுவாகக் கண்ணிற்குத் தெரியுமேயன்றி, அதன் நிலைப்புக்கே காரணமாய் உள்ள அடிப்படை, யாருக்கும் தெரிவதில்லை. அதுபோலத்தான் மக்களது ஒழுக்கம் வெளிப்படையாகக் காணப்படுமேயன்றி, அதற்கு அடிப்படையான கடவுள் நிலை ஒருவருக்கும் காணப்படாது. கடவுட் கொள்கையில்லாத நல்லொழுக்கம், அடிப்படையில்லாத கட்டிடம் போன்றது; நீடித்து நில்லாது; சோதனைக்கும் நிற்காது.

## புராண காலத்தில் கடவுட் கொள்கை :

'சிவபிரான் தாருகாவன முனிவர் பத்தினியரிடத்தில் பிட்சாடனராய்ச் சென்று அவர்கள் கற்பையும், திருமால் தாருகாவன முனிவரிடத்தில் மோகினியாய்ச் சென்று அவர்கள் தவத்தையும் சோதித்தபொழுது அவர்கள் அவற்றை இழந்தார்கள்' என்னும் புராண வரலாறு, 'கடவுட்கொள்கையில்லாமல் நல்லொழுக்கம் நிலைக்கமாட்டாது' என்னும் உண்மையையே விளக்குவது.

இன்றல்ல; எத்தனையோ காலத்திற்குமுன் 'தாருகாவன முனிவர்' என்பவர்கள், 'அவரவர்களுக்கு உரிய கன்மத்தை - கடமையை - அவரவர்கள் தவறாமல் செய்தால் போதும்; கடவுள் நம்பிக்கை வேண்டுவதில்லை' என்று கருதினார்கள். அக்கருத்தையே தங்கள் மனைவிமார்கட்கும் சொல்லி வற்புறுத்தி வந்தார்கள். அவர்கட்கு நல்லறிவு புகட்ட வேண்டியே சிவபிரான் பிட்சாடனக் கோலம்கொண்டு அம்முனிவர் பத்தினியாரிடத்துச் சென்றார். இறைவனது ஆணையின்வழி திருமால் மோகினி வடிவங்கொண்டு அம்முனிவரிடத்துச் சென்றார். அவர்களது அழகைக் கண்டபொழுது அவர்பால் மனத்தைப் பறிகொடுத்து, முனிவர் பத்தினியர் தம் கற்பினையும், முனிவர்கள் தவத்தினையும் இழந்தார்கள். உண்மையை உணர்ந்தபின்பு முனிவர்கள், 'நல்லொழுக்கத்தைக் காப்பதுங்கூட இறைவனது திருவருள் இல்லாமல் இயலாது' என உணர்ந்து பின்னர்க் கடவுளை வழிபடலானார்கள். ஆனால், அவர்களால் சபிக்கப்பட்ட அவர்

தம் பத்தினியர் அடுத்த பிறப்பில் இறைவனை வழிபட்டுத் தூய்மை உற்றனர். இது பழங்கதை.

## கடவுட்கொள்கை பற்றி மேல்நாட்டறிஞர் :

தற்காலத்தில் ஒரு மேல்நாட்டு அறிஞர், 'கடவுட் கொள்கை யில்லையேல் நாடு நேர்மையும் ஒழுக்கமும் இன்றிச் சீர் குலைந்து போகும்' என்று கூறியுள்ள கருத்துப் பின் வருவது:

'புண்ணிய - பாவக் கொள்கையும், புண்ணியத்தால் நன்மை யும், பாவத்தால் தீமையும் விளையும் என்ற நம்பிக்கையும், இவற்றை இறைவன் இடைநின்று அவரவர்கட்குக் கூட்டு விப்பான் என்ற கோட்பாடும் மக்களிடையே நிலைபெற்றிருக்கும் இக்காலத்திலேயே பல்வேறு வகைப் பூட்டுக்களும், காவல் நிலையங்களும், நீதி மன்றங்களும் நாளுக்குநாள் பெருகிவரு கின்றன என்றால், மேற்சொல்லியவை யாவும் இல்லை என்று எண்ணும் நிலை மக்களிடையே பரவுமானால், இன்று இருக்கும் இந்த அமைதிகூட மக்களிடையே இல்லாது போய்விடும். உண்மையிலேயே, 'கடவுள் இல்லை' என்று தீர்மானிக்கப்பட்டா லுங்கூட, மக்களது நன்மையின் பொருட்டு நாம் ஒரு கடவுளைப் படைத்தாவது வைத்துக் கொள்ள வேண்டும்'

## கடவுட்கொள்கைக்கு அரண் :

இது அந்த மேல்நாட்டு அறிஞர் கூற்று. 'கடவுள் இல்லை என்று தீர்மானிக்கப்பட்டாலுங்கூட' என்று அவர் கூறுவது ஒரு வாதத்திற்காகவே தவிர, வேறல்ல. என்றாலும் இதுபோலச் சிலர், 'கடவுள் இல்லை' என்று வாதிக்க முன் வந்தாலும், இன்றைய விஞ்ஞான மேதைகள் அவ்வாறு வாதிக்க முற்படா மல், கடவுட் கொள்கைக்கு அரணானவற்றையே கூறுகிறார்கள். அண்மையில் வாழ்ந்திருந்தவராகிய மாயூரம் வேதநாயகம் பிள்ளை எளிமையான சில உவமைகளால் கடவுள் உண்மையை வலி யுறுத்தியிருத்தல் அறியத்தக்கது.

"தீட்டுவான் இன்றி ஆமோ சித்திரம்! திகழ்பொற் பாவை
ஆட்டுவான் இன்றித் தானே ஆடுமோ! திவ்வி யாழின்
மீட்டுவான் இன்றிக் கீதம் விளையுமோ! சராச ரங்கள்
நாட்டுவோன் ஒருவன் இன்றி நன்கமைந் தொழுகுங்
கொல்லோ!

இது,

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகு வித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணு தாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே"

என்ற அப்பர் அருள்வாக்கையே எளிய முறையில் விளக்குவதாயிருத்தல் அறியத்தக்கது.

இதுபோலப் பண்டைப் பெரியோர்கள் கடவுள் உண்மையை விளக்கியுள்ள பாடல்களும், உரைகளும் பல. அவற்ருல் நிலைபெற்றுள்ள கடவுட் கொள்கையால்தான் மக்களிடையே 'நல்லொழுக்கம்' என்பது ஓரளவிலாவது காணப்படுகின்றது. 'சிறுபோது கல்வி, சிலையில் எழுத்து' என்பதுபோலப் பள்ளிகளிலேயே சிறுவர்கட்குத் தரப்பட வேண்டிய கடவுட் கொள்கையை அவ்வாறு தருவதற்கு வாய்ப்பில்லாது போய்விட்ட சூழ்நிலையைக்கண்டு அறிஞர் பலர், 'அந்த வாய்ப்பினை உண்டாக்குதல் வேண்டும்' என்று அவ்வப்பொழுது சொல்லி வருதல் பலரது உள்ளத்தில் பதிந்து செயல்படவேண்டும்.

## சட்டமன்ற உறுப்பினர் கருத்து :

இம்மாதம் (ஏப்ரல்) 4 ஆம் நாள் தமிழகச் சட்டமன்றத்தில் தி. மு. க. உறுப்பினர் ஒருவரே (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்) 'கடவுட் கொள்கை மக்கள் உள்ளத்திற்கு அமைதியையும், நம்பிக்கையையும் தருவதாக உள்ளது' என்று கூறியதோடு, 'கோயில்களில் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களே அறங்காவலராக அமைய வேண்டும்' என்றும் பேசியிருக்கின்ருர் * அவரது பேச்சுக்கள் பாராட்டுக்கும், மகிழ்ச்சிக்கும் உரியன

* Mr. V. Krishnamurthi (D M K), however, did not agree with the Chief Minister. He said only those who believed in God should be made trustees. The people watched when a trustee visited the temple whether he accepted the "prasadam" or not. Trustees should therefore be real "bhakthas"

வாக விளங்குகின்றன. ‘கடவுட் கொள்கை மனித வாழ்வில் எந்த ஒரு வகையிலாவது நன்மை அளிப்பதாக உள்ளது என்ற எண்ணம் ஆட்சியாளர்களுக்குத் தோன்றியிருப்பது நல்லதோர் அறிகுறியாகும்.

உண்மையிலேயே ஆட்சியாளரிடமும். மக்களிடமும் கடவுட் கொள்கை வேரூன்றுமானால், அதன் வெளிப்பாடான நம்பிக்கை, நாணயம், தியாகம் முதலிய நற்பண்புகள் நாட்டில் தாமே பல்கிப் பெருகி, நாடு நலம்பெறுவது உறுதி.

---

before God. They should wear their caste-mark and be religious not only in mind but also in appearance.

Mr. Krishnamurthi said it was not neeessary to go to temples te believe in God He said they were all Hindus and "the religious feeling of a Hindu should be there in all of us". He said temples were places whieh provided solace to the mind. It was because people discarded temples and gave up faith in God that they had become frustrated and indulged in all sorts of strange activities including "streaking" to "let off steam". As the member quoted a Tamil verse, Mr. Karunanidhi remarked: "Saint Thirugnana Sambandar too cast away clothes". Mr. Krishnamurthi said the Saint did not run naked.

— "The Hindu" 5—4—'74.

---


## ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்

அண்மையில் வெளிவந்த நூல்களின் விலை விபரம்.

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் நினைவு மலர் | 4 — 50 |
| 2. | நித்தியகன்மநெறி (பொழிப்புரையுடன்) | 1 — 50 |
| 3. | புட்ப பலன் | 0 — 25 |
| 4. | திருவருட்பயன் (விளக்கவுரை) | 2 — 50 |
| 5. | ஆனந்தவருஷ பஞ்சாங்கம் | 1 — 25 |
| 6. | செந்தமிழ்ப் பூம்பொழில் (ஐந்தாம் தொகுதி) (ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியின் அருளுரைகள்) | 3 — 50 |
| 7. | தருமையாதீனமும்தாயுமானவர்திருக்கோயிலும் | 0 — 75 |

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளும்

# புத்தாண்டு அருள் ஆசி

## பழமையும் புதுமையும்

பழமையில் ஒரு சலிப்பும், புதுமையில் ஒரு மகிழ்ச்சியும் கொள்ளுதல் பொதுமக்களுக்கு உள்ள ஓர் இயல்பு. இதற்கு ஆண்டுகளின் மாற்றங்களும் விலக்கல்ல. வருகின்ற புத்தாண்டும் "ஆனந்தம்" என்ற பெயருடனே வருகின்றது. புத்தாண்டின் பெயரைக் கேட்கும் பொழுதே ஆனந்தமாகத் தான் இருக்கின்றது. அதன் பலனையும் ஒரு வெண்பா பின் வருமாறு ஆனந்தமாகக் கூறுகின்றது.

ஆனந்த ஆண்டதனில் ஆகாத தொன்றுமில்லை;
வானம் பொழியும் வரிவிளையும் — தேனே
கரும்புண்டாம் ஆமணக்குக் காணுது காயில்
வருந்தா னியம்குறைவாம் வந்து.

## புத்தாண்டுப் பிறப்பு

புத்தாண்டுத் தினம் மகிழ்ச்சிக்குரிய ஒன்று. நல்ல நாளுங் கூட; அதனை மக்கள் வழக்கம்போல வரவேற்று, நல்ல முறையில் கொண்டாடி மகிழ இருக்கின்றார்கள். புத்தாண்டுப் பிறப்பில் பஞ்சாங்கம் கேட்டு அந்த ஆண்டில் விளைய இருக்கும் பலன்களை அறிதல் மரபு. அந்த மரபும் தவறாமல் கடைப்பிடிக்கவேபெறும்.

## சிந்தனை வேண்டும்

புத்தாண்டுப் பிறப்பை இவ்வாறு மரபு பிறழாமல் கொண்டாடிப் பஞ்சாங்கத்தில் உள்ளதைப் படித்தோ அல்லது கேட்டோ போய்விடுதல் மட்டும் போதுமா? அவை பற்றிய சிந்தனை வேண்டாமா? "பஞ்சாங்கம் என்பது, 'திதி, வாரம்,

நட்சத்திரம், யோகம், கரணம்' என்னும் ஐந்து உறுப்புக்களால் அவ்வப்பொழுது அமையும் காலத்தின் தன்மையைக் கூறுவது. அதன்வழிக் காலத்தின் தன்மையை அறிந்துகொள்வது, மனிதன் அதற்கு ஏற்பத் தன் செயல் முறையை வகுத்துக் கொண்டு செயற்படுதற்கேயல்லது, "எல்லாம் காலத்தின்படி நடக்கும்" என்று சொல்லிவிட்டுக் கவலையற்று இருப்பதற்காக அல்ல.

## இன்றைய நிலை

புத்தாண்டை வரவேற்கும் மகிழ்ச்சியில் நாம் பழைய ஆண்டின் நிகழ்ச்சிகளை மறந்துவிடுதல் கூடாது. அவற்றை நினைவிற்கொண்டே அடுத்த ஆண்டில் நமது செயல் முறைகளை அமைத்தல் வேண்டும். பொதுவாக இன்று நாட்டில் எந்த இடத்திலும் அமைதியில்லை. எங்கும் வேலை நிறுத்தம், கிளர்ச்சி, வன்முறை இவைகளே காணப்படுகின்றன. சட்டசபைகளுக்குள்ளேயே கூடக் கூச்சலும், குழப்பமும் நிகழ்கின்றன. தேர்தலை நடத்திப் புதியதாக அமைக்கப்படும் சட்ட மன்றங்கள் மிகக் குறைந்த வாழ்நாளில் மறைந்து விடுகின்றன. இளைஞர் சமுதாயம், பல்வேறு சூழலில் சிக்கித் தனது எதிர்கால நிலையைச் சிறிதும் கருத்திற் கொள்ளாது. மாலுமியில்லாக் கப்பல்போலத் தான்போவதே போக்காய்ப் பல்வேறு திசையில் செல்லத் தொடங்குகின்றது.

## மக்களின் கடமை

இத்தகைய அமைதியின்மைக்குக் காரணங்கேட்டால், ஒவ்வொருவரும் மற்றவர்மேல் குற்றம் சொல்லுகிறார்களேயன்றித் தங்கள்மேல் குற்றம் உள்ளதாக ஒப்புக்கொள்வதில்லை. தொழிலாளி முதலாளியையும் முதலாளி தொழிலாளியையும் குற்றம் கூறுதல், மக்கள் ஆட்சியாளர் மீதும், ஆட்சியாளர் மக்கள்மீதும்பழிபோடுதல் இவைதான் இன்றுகாணப்படுகின்றன. அரசியலார் அவ்வப்பொழுது கொண்டுவரும் சட்டங்களில் சில, மக்கள் கடைப்பிடிக்க இயலாத வகையில் அமைதல் இவற்றிற்கு ஓரளவு காரணமாகலாம். என்றாலும், சட்டத்திற்கும், ஒழுங்கிற்கும் மதிப்புத்தர மக்கள் கடமைப்பட்டவர்கள். அவ்வாறு இல்லாவிடில், எந்த அரசும் மக்களுக்கு நல்வாழ்வை அளிக்க இயலாது. ஆட்சியாளரும் சட்டங்களின் தன்மையையும், விளைவையும் ஆழச் சிந்தித்தே சட்டம் இயற்றக் கடமைப் பட்டவர்கள்.

இவையெல்லாம் எப்படி இருப்பினும், தன்னலமும், உழைப் பின்றியே உண்டு உயர விரும்பும் விருப்பமும், மற்றவர் படும் துன்பத்தைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாத மனப்பான்மை யுமே நாட்டின் இன்றைய நிலைக்குப் பெரிதும் காரணமாகும். மக்கள் இவைகளை விடுத்துப் பொதுநலம் பேணலும், உழைப் பும், ஈவு இரக்கமும் உடையவர்களாக இருக்க உறுதி யெடுத்துக் கொள்வார்களானால், அதுவே அவர்கள் உண்மையில் புத்தாண்டுப் பிறப்பை நன்முறையில் கொண்டாடுவதாக அமையும். அத்தகைய நல்ல உள்ளத்தை மக்கள் அனைவர்க்கும் வழங்க இறைவனை வேண்டுவது நமக்குக் கடமையாகின்றது.

## இறைவனின் இயல்பு :

தேவிமான்மியத்தில் தேவியின் பெருமையைப் பற்றிச் சில கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. அவை, தேவி வியாபக மான மாயாசொரூபமாக இருக்கிருள். எல்லா உயிர்களிடத்தும், அவற்றின் அறிவு, புத்தி, ஆற்றல், பொறுமை, அமைதி, ஊக்கம், மனப்பான்மை, இரக்கம், மகிழ்ச்சி முதலிய அனைத்து வடிவாக வும், இருக்கின்ருள் என்பன. இஃதே இறைத்தன்மை யாதலால், இத்தகைய இறைவன்தான் இன்று எல்லா மக்களுக்கும் நல்லறி வையும், நற்புத்தியையும், ஆற்றலையும், பொறுமையையும், அமைதியையும், ஊக்கம் முதலியவற்றையும் தருதல் வேண்டும். இதை நாம் இறைவனிடம் விண்ணப்பித்துக் கொள்வதற்கு வாய்ப்பாக, நம் ஆதிபரமாசாரியர் ஸ்ரீ குருஞான சம்பந்தர், அன்றே தம் ஆன்மார்த்தமூர்த்தியாகிய ஸ்ரீ சொக்க நாதப்பெருமானிடம் செய்துகொண்ட விண்ணப்பம் ஒன்று உண்டு. அதில் அவர் இறைவனை நாள்தோறும் தம் உள்ளத் தில் எழுந்தருளி வந்து சித்தமயலைப்போக்கி, நற்புத்தியை நன்கு போதித்து, நிலையான பூரண இன்பத்திலே, திளைக்கச்செய் தருளும்படி வேண்டுகின்ருர்.

நித்தம் எழுந்தருளி நின்மலனே என்றனக்குப்
புத்தி மிகமிகவும் போதித்துச் — சித்தமயல்
போக்குவாய்; இன்பசுக பூரணத் திரண்டறவே
ஆக்குவாய் சொக்கநா தா.

இந்த விண்ணப்பம் இகம், பரம் இரண்டிற்கும் பொருந்து வதாய் வேண்டுவோர் வேண்டுவதைத் தருவதாகும். ஆகவே, இதனையே சொல்லி விண்ணப்பித்து, ஆனந்த ஆண்டில் மக்கள் அனைவரும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளால் நல்ல அறிவும், அருளும், அமைதியும், ஆக்கமும் பெற்று ஆனந்தத்துடன் வாழ்வார்களாக.

உ

குருபாதம்

# ஆனந்தம் மலர்கிறது

புலவர் திரு. இரா. செல்வக்கணபதி

இன்பங்கள் தான்வந்து சேரும் போது
இதயத்தை அறியாமை மூடிக் கொள்ள
அன்பற்று ஆணவத்தில் அழுந்தி மாயும்
அறிவற்ற மானிடத்தைக் காணு கின்றோம்!
துன்பங்கள் தனைநோக்கி வந்த போதோ
தூய்தான அறிவுநலம் எழுச்சி கொள்ள
அன்புற்று உயிர்க்கெல்லாம் இன்பம் சேர்க்கும்
அறிவுற்ற மானிடத்தைக் காணு கின்றோம்! (1)

ஆனந்தத் திருக்கூத்தை உலகம் உய்ய
ஆண்டாண்டாய் நிகழ்த்துகின்ற தில்லைக் கூத்த!
ஆனந்தம் வரும்போதும் அறிவில் நிற்கும்
அனுபூதி நினக்கன்றி மாந்தர்க் குண்டோ?
தானந்தம் ஆதிநடு இல்லா தோங்கும்
தமிழ்ஞானச் செழுஞ்சுடரே எங்கள் வாழ்வில்
ஆனந்தம் மலர்கிறது! நெஞ்சுக் குள்ளே
அகங்காரம் பிறவாது காத்தல் செய்வாய்! (2)

இன்பத்தைப் பெரிதென்று மதியா நெஞ்சும்,
யாருக்கும் துன்பங்கள் இழைக்கா வாழ்வும்,
அன்புக்குத் தலைசாய்க்கும் அருமைப் பண்பும்,
அகங்காரம் இல்லாத அமைதி வாழ்வும்,
துன்பங்கள் வரும்போதும் துவளா நெஞ்சும்,
தூய்தான உழைப்பிற்குத் தலைமைப் பாடும்,
என்றென்றும் தருகின்றாய்! இனியும் உன்பால்
இரக்கின்றோம்! இவையெல்லாம் ஈதல் வேண்டும்! (3)

புத்தாண்டு ஆனந்தம் என்னும் பேரால்
புதிதாக மலர்கிறது; மக்கள் வாழ்வில்
தித்திக்கும் இன்பங்கள் இந்த ஆண்டில்
திகழ்ந்தோங்கத் திருவடிகள் போற்று கின்றோம்!
எத்திக்கும் தமிழ்மணக்க, சைவம் ஓங்க,
எல்லாரும் எல்லாமும் பெற்றே வாழ
அத்தா!உன் அடிபோற்றி புதிய ஆண்டை
அகம்பூத்த மகிழ்வாலே வாழ்த்து கின்றோம்! (4)

# தீயவர்களைக் கண்டுபிடிப்பது எப்படி ?

'துஷ்டரைக் கண்டால் தூர விலகு' என்பது இந் நாட்டின் பழமொழி. சிலரை நாம் துஷ்டன் என்கிறோம். அவர்கள் உறவு கூடாது என்கிறோம். ஆனாலும், துஷ்டர் என்பவர்கள் யார்? அவர்கள் செய்யும் தவறு என்ன என்பதை எல்லாம் நாம் அவ்வளவாக ஆராய்ந்தறிவதில்லை.

இந்த துஷ்டர்களைத் திருவள்ளுவர் 'கயவர்' என்று குறிப்பிடுகிறார். 'மேவனசெய்து ஒழுகுவார்' என்று இவர்கள் விரும்பியவாறு வாழ்கின்றவர் என்றுமட்டும் அவர் போகிறார்.

ஆனால், இந்தத் தீயவர்களைச் சரியாக அடையாளங் காட்டி அவர்கள் உறவறுத்துக்கொள்ள வழி கோலுகிறார்; நமது தருமையாதீன முதற்குரவராகிய ஸ்ரீ குருஞான சம்பந்தப் பெருமான்! பாடல் இதோ!

" தனையறியார்; ஈசன் தனையறியார்; பாச
வினையறியார்; ஆனந்தம் மேவார்; — தனையறியும்
சிட்டர்தமக்(கு) இல்லாத தீங்குரைப்பர் பொல்லாத
துட்டர் தமக்கு உள்ள தொழில் "

1. தான் யார்? எங்கிருந்து வந்தோம் என்ற தற்சோதனை அவர்களுக்கு இல்லை.
2. தன்னையே அறியாமையால் தலைவனாகிய ஈசனையும் அவன் அருளையும் அறிவது இல்லை.
3. உயிர்களைப் பற்றி நிற்கும் மலங்களைப்பற்றியோ - கவலை என்பது அவர்களுக்கு இல்லை.
4. தாங்களாவது இன்பம் பெற்று வாழ்வார்களா என்றால் அதுவும் இல்லை.
5. மற்றவர்கள் இன்பத்தையும் சகிக்க மாட்டாதவர்களாய்க் கல்வி அறிவு மேம்பாடு உடைய சான்றோர்களைப் பற்றித் தீமைகளே பேசுவார்கள்.

இந்த ஐந்து செயல்களும் பொல்லாத துட்டர்களை நமக்கு அடையாளங்காட்டும் என்கிறது இந்தச் சிவபோகசாரத் திருப்பாட்டு.

சுருக்கமாகக் கூறினால் பதி, பசு, பாச உண்மையறியாது, தாமும் வாழாது, மற்றவர்களையும் வாழவிடாதவர்களே துட்டர்கள் என்பது புலனாகிறது. —இரா. செ.

# திருவாமூரில் அப்பர்சுவாமிகள் குருபூஜை விழா

18—4 –74 வியாழக்கிழமை



திருநாவுக்கரசு சுவாமிகள்

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச்

சொந்தமான

## சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம்

# திருமுலைப்பால் பெருவிழா

சமயாசாரியர் நால்வருள் முதல்வராய், இறைவன் கருணையால், அம்மை அருளிய ஞானப்பாலை உண்டு, சிவஞானம் கைவரப்பெற்று எண்ணற்ற செந்தமிழ்ப் பாமாலைகள் புனைந்து - பெருமான் திருவடிகளுக்குச் சூட்டி - புறச்சமயக்களைக் களைந்து - சைவப்பயிர் வளர்த்து நாளும் இன்னிசையால் தமிழ்ப் பரப்பிய அருளாளர் திருஞானசம்பந்தப்பெருமான்.

வேதநெறி தழைத்தோங்கவும் - மிகுசைவத்துறை விளங்கவும் - பூதபரம்பரை பொலியவும் திருஞானசம்பந்தர் புனிதவாய் திறந்து அழுதபோது இறைவன் கருணையால் - அம்மை தம் திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்தேந்தி சிவஞானம் குழைத்தூட்டிய ஐதிகத் திருவிழாக்காட்சி, இவர்கள் அவதாரஞ்செய்த சீகாழிப்பதியில் ஆண்டுதோறும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டு வருகிறது.

சித்திரைப் பெருவிழாவின் இரண்டாம் நாளான 27—4—74 சனிக்கிழமை இவ்வாண்டு திருமுலைப்பால் திருவிழா நடைபெறவுள்ளது. பல்லாயிரம் அன்பர்கள் புடைசூழ ஞானசம்பந்தப் பெருமான் தம் திருக்கோயிலிலிருந்து புறப்பட்டுப் பிரமதீர்த்தக் கரைக்கு வருவதும் - இறைவன் இறைவியோடு எழுந்தருளி வந்து ஞானப்பால் வழங்குவதும் - வரலாற்று விளக்கங்களோடும் தேவார இன்னிசையோடும் இவ்விழா நிகழ்வதும் உள்ளத்தை நெகிழ்வித்து மெய்சிலிர்க்க வைக்கும் தன்மையன.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளப்பாங்கின்வண்ணம் நடைபெறும் இப்பெருவிழாவிற்கும் - இதன் தொடர்பாய் நடைபெறவிருக்கும் - திருமுறை மாநாட்டிற்கும் மக்கள் வந்திருந்து வழிபட்டும், செவிச்செல்வம் துய்த்தும் திருவருள் பெறுவார்களாக.

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னாகரம்
**சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்**

(மலர் 33. இதழ் 3. பக்கம் 164 இன் தொடர்ச்சி)

गायत्र्या प्राक्कृतामर्चां अभ्यर्च्याजादि शंवरैः ।
सामान्यार्घ्येण दत्वाऽर्घ्यं तथा वृह्माणि विन्यसेत् ॥
लिङ्गस्थं माल्यमैशान्यां हृदा चण्डाय निक्षिपेत् ।
अस्त्रेण पिण्डिकां लिङ्गं प्रक्षाल्यास्त्रार्घ्य वारिणा ॥
हृदाभिषेचयेल्लिङ्गं इति लिङ्ग विशोधनम् ।

— रामनाथपद्धति

இவ்வாறு காயத்ரியால் அர்ச்சித்து நைஷ்டிகன் சத்யோஜாதம் முதலாகவும் பௌதிகன் ஈசானம் முதலாகவும் அர்ச்சித்து அர்க்கியம் கொடுத்து நிர்மால்ய விஸர்ஜனம் செய்து அதை சண்டேசனின் பொருட்டு ஈசானபாகத்தில் ஹ்ருதய மந்திரத்தால் வைத்துவிட்டு அஸ்திரத்தினால் இலிங்கத்தையும் பாசுபதத்தினால் பீடத்தையும் அலம்பி சாமான்யார்க்கியம் கொடுத்து ஹ்ருதய மந்திரத்தினால் அபிஷேகம் செய்ய வேண்டும்.

ஒருபொழுதும் இலிங்கத்தின் மஸ்த்தகம் சூனியமாக இருக்கக்கூடாது ஆதலால்சிறுவிரல் அணிவிரலிடுக்கில் புதிய புஷ்பத்தை வைத்துக்கொண்டு, பெருவிரலுடன் சுட்டுவிரலைச் சேர்த்து, பழைய புஷ்பத்தை இலிங்க மஸ்தகத்தினின்றும் எடுத்து, எடுக்கும் அதே நேரத்தில் புதிய புஷ்பத்தைச் சாத்தவேண்டும்.

ஆன்மார்த்த பூஜையில் ஆன்மார்த்த லிங்கத்தைத் தனக்கு அபிமுகமாக வைத்துப் பூஜிக்கவேண்டும் என்று விதிகள் கூறுவதாலும், அபிஷேகம் முதலியன இலிங்கத்தை பூர்வாபிமுகமாக வைத்துச் செய்யவேண்டும் என்று விதி காணப்படுவதாலும் லிங்கத்தை ஸ்னானவேதிகையில் வைத்து

சலாஸனம் பூஜித்து அஷ்டபுஷ்பம் சாத்தி பஞ்சகவ்ய பஞ்சாமிருதங்களால் அபிஷேகம் செய்து பின்னர் மாப்பொடி முதலியவை களாலும் ஸஹஸ்ரதாரை சீதளோதகம் கந்தோதகம் முதலியவைகளாலும் அபிஷேகம் செய்துவெண்மையானவஸ்திரத்திஞல் துடைத்து, பூஜாபீடத்தில் ஆரோஹணம் செய்விக்க வேண்டும்.

स्थण्डिले चरलिङ्गे च साधकाभिमुखश्शिवः ।
प्रत्यक्चक्रस्सकुम्भादौ स्थिरे द्वाराभिसंमुखः ॥

என்ற வசனத்திஞல் சரலிங்க விஷயத்தில் பூஜகனுடைய அபிமுகமாக இறைவனிருக்கிருன். அதாவது ஸ்தண்டிலம் சரலிங்கம் இவ்விரண்டிலும் இறைவன் சாதகாபிமுகன், கும்பத்தில் பச்சிமாபிமுகன், ஸ்திரலிங்க விஷயத்தில் த்வாராபிமுகன்.

— சர்வஞானேத்தரம்

नप्राच्यामग्रतः तिष्ठेत् नोत्तरे योषिदाश्रये ।
नप्रदीच्यां यतः पृष्ठं तस्माद्दक्षं समाश्रये ॥

சுவாமிக்கு எதிரிலும் தேவியின் ஆச்ரயமான வடக்கிலும், பின்புறமான மேற்கிலும் நின்று இறைவனைப் பூஜிக்காதே.

अग्नीवा निऋतीवाऽपि स्थित्वा देवं प्रपूजयेत् ।

தென்கிழக்கிலாவது, தென்மேற்கிலாவது இருந்துகொண்டு இறைவனைப் பூஜிக்கவேண்டும் என்று காணப்படும் வாக்கியங்கள் ஸ்திரலிங்க விஷயம்.

खेटके पश्चिमे देशे द्वारं संपूज्य देशिकः ।

— अंशुमान्

சல லிங்கத்தில் பச்சிமத்வாரம் பூஜிக்கத்தக்கது.

— அம்சுமான்

நித்யத்வாரம் பச்சிமத்தில் பூஜித்து, சுவாமியை தக்ஷிணுபிமுகமாக வைத்துத்தான் உத்தராபிமுகமாகவிருந்து பூஜிக்க வேண்டும்.

अजातमिममेवैकं मत्वाजन्मनि भीरवः ।
रुद्रस्यास्य प्रपद्यन्ते रक्षार्थं दक्षिणामुखम् ॥

— वायुसंहिता

रुद्र यत्तेदक्षिण मुखं तेन मां पाहि नित्यम ॥ — श्रुतिः

ஜன்மாவில் பயமடைந்தவர்களான மக்கள் இவன் ஒருவனே பிறப்பற்றவன் என்று எண்ணி அந்த பீருக்கள் ஹே ருத்ர! உனது தெற்குமுகத்தையே ரக்ஷயின் பொருட்டு அடைகிறார்கள். — வாயு சம்ஹிதை

ஹே ருத்ர! யாதொரு உனது தெற்குமுகம் உண்டோ அதனால் என்னைக் காப்பாற்று. — உபநிஷத்

என்பதினால் பூஜ்யபூஜகாபிமுகமாக இருந்து பூஜிக்க வேண்டும் என்பதினாலும் உத்தராபிமுகமாகவே ஆசாரியன் சிவபூஜை செய்யவேண்டும் என்பதினாலும் ஆசாரியனுக்கு உத்தராபிமுகமும், இறைவனுக்கு தக்ஷிணாபிமுகமும் சித்தம். — ஸ்வமதம்

சலலிங்கவிஷயத்தில்

पूज्यमानं यदालिङ्गं हस्तादि स्पर्शतो मनाक् ।
चलितं घोर मंत्रस्य शतं शेषक्रियां नयेत ॥

— ज्ञानरत्नावलि

பூஜிக்கப்படும் இலிங்கம் கைகள் முதலானவை பட்டு சலனம் அடையுமேயானால் அதன்பொருட்டு ப்ராயச்சித்தமாக அகோரமந்திரம் நூறு ஆவர்த்தி ஜெபம் செய்துவிட்டு அதன்பிறகு மீதியுள்ள கிரியைகளைச் செய்ய வேண்டும். — ஞானரத்னவளி

ஆதலால் இலிங்கசுத்திக்கு சலாஸனம் பூஜைசெய்து லிங்கத்தை பூர்வாபிமுகமாக வைத்து அபிஷேகம் முதலியன செய்து பிறகு பீடத்தில் வைத்து முறைப்படி பூஜைசெய்ய வேண்டும்

ஆத்மார்த்த பூஜையில் சலலிங்கத்திற்கு சலனதோஷம் இடையாது என்று பல விதிகள் காணப்படுவதால் ஸ்திராசனம் பூஜைசெய்து தசஸம்ஸ்காரம் செய்தபிறகு அபிஷேக வேதிகையில் வைத்து சாங்கோபாங்கமாக அபிஷேகம் செய்யலாம்.

பீடத்தின் வடமேற்கில் தெக்ஷிணாபிமுகமாக விநாயகரை யும் பீடத்திற்கு வடக்கில் தெக்ஷிணாபிமுகமாக இலக்குமியை யும் பூஜித்து வாமாதி சக்திகளையும் தியானித்து அதன் ஈசா னத்தில் சதாசிவன் முதலிய சப்த குருக்களைப் பூஜித்துப் பிரார்த்திக்கவேண்டும்.

गणेश कमले स्वामिपादुके मां जगत्गुरुम !
यजन्त मनुजानीत यथा संपन्नकारकम ॥

என்று பிரார்த்தித்து சிவபூஜை செய்யவேண்டும்,

शक्त्यादि शक्तिपर्यंत मासनं परिकल्पयेत् ।

முதலில் சத்தியாதி சத்தியாந்தமாக ஆஸனத்தை கல்பிக்கவேண்டும்- அதாவது ஆதாரசத்தி முதல் குடிலா சத்தி ஈருகவுள்ள ஆஸனம் என்று பெயர்.

சிவசம வேதையான கிரியாசத்தியே ஆதாரமுடையதாகும், அதை முதலில் லிங்கபீட நடுவில் கீழ்ப்புறத்தில்கூர்மசிலையில் பூஜிக்கவேண்டும்.

பின்னும் இந்த சத்தியானது அண்டத்தை மறுபடி பேதித் துக்கொண்டு கந்தத்திலிருந்து முளைபோல் கிளம்பியிருக்கும் பிருதிவி தத்துவம் முதல் மாயாதத்துவம்வரையில் பத்மத்தின் அதோ பாகமென்னுமிடத்தில், பிரதிவீ தத்துவம் கிழங்கு, அப்பு தத்துவம் நனைப்பு. அக்னி தத்துவம் உப்புச்செய்யும். வாயு தத்துவம் அசைக்கும். ஆகாச தத்துவம் பிரவர்த்திப் பிக்கும். கந்தம் முதல் பஞ்ச தன்மாத்திரைகளும் முளைக ளாகும். பத்து இந்திரியங்களும் ரந்தரங்களாகும். அஹங் காரம் வளர்க்கும், புத்தி, குணம், பிரகிருதி, புருஷன் என் னும் நாலு தத்துவங்களும் முறையே தர்ம ஞான வைராக்ய ஐச்வர்ய ரூபங்களான சிங்காஸனத்தின் நான்கு பாதங்க ளாகும். ராகம், நியதி, வித்தை, கலை என்னும் நாலு தத்து வங்களும் அதர்மம், அக்ஞானம், அவைராக்யம், அனைச்வர்யம் என்ற ரூபங்களான பாதங்களின் மேலிருக்கும் காத்திரங்க ளாகும்.

( தொடரும் )

# திருமூலர் காட்டும் பசுவிலக்கணம்

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன்
எம். ஏ., பிஎச். டி.,

இறை, உயிர், உலகு என்பன மூன்றும் என்றும் உள்ள பொருள்களே என்பதைத் தமிழாகமம் ஆகிய திருமந்திரம் மிகவும் தெளிவாக முதற்கண் விளக்கியுள்ளது என்பதைச் சமய உலகு நன்கு அறியும்.

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி"

என்பது திருமந்திரம். சிவயோகியாக விளங்கிய திருமூலதேவ நாயனார் தம்முடைய யோக அனுபவங்களைத் தெளிவாகப் பல்வேறு மந்திரங்களிற் கூறியுள்ளார். "மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்" என்று அவரே தாம் கூறியது எவ்வளவினது என்று தெளிவாக்கியுள்ளார். திருமூலர் முப்பொருள்களுள் ஒன்றாகிய 'பசு'வின் இலக்கணம் குறித்துக் கூறும் செய்திகளைப் பின்னேவந்த மெய்கண்ட சாத்திர நூல்களோடு ஒப்பிட்டுக் காண்டலே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

திருமூலர் பசுவியல்புகளைப் பல்வேறு இடங்களிற் கூறியுள்ளாரேனும், ஏழாம் தந்திரத்தில் (27) 'பசுவிலக்கணம்' எனுந் தலைப்பிற் கூறியுள்ள பதினேழு பாட்டுக்கள் மட்டுமே இங்கு எடுத்துக் கொள்ளப்பெறுகின்றன. ஏனெனில், இந்தத் தலைப்பிற் கூறப் பெற்றுள்ள பசுவியல்பு பற்றிய செய்திகளே, உயிர்கள் பற்றிய திருமந்திரத்தின் தெளிந்த கருத்து என்று கருதலாம்.

இவ்வதிகாரத்தில், பசுவிலக்கணம் என்ற தலைப்பிற்குப் பிறகு, சில உட்பிரிவுகளும் காணப்படுகின்றன. பிராணன், புருடன், சிவன், பசு, போதன் ஆகிய ஐந்து தலைப்புக்கள் இப்பாடல்களுக்குத் தரப்பெற்றுள்ளன.

உயிர் இறைவனோடு என்றும் ஒன்றி நிற்பதால், மலத்தோடு தோன்றித் திருவருளால் பிரிந்து, சிவத்தொடு சார்ந்து, பிரிப்பின்றி இன்பமயமாய் இருப்பது என்பர். இறைவன்

உயிர்ப்பாகப் புறத்தே போந்து புக்கு உயிர்க்குள் இருக்கும் நிலையை முதற்பாட்டில் மொழிகின்றார் நாயனார்.

"உன்னும் அளவில் உணரும் இறைவனைப்
பன்னு மறைகள் பயிலும் பரமனை
என்னுள் இருக்கும் இளையா விளக்கினை
அன்மை யனன் றறிந்து கொண்டேனே"

கடைசியடியை, "அன்னமயமென்று" பாடங்கொண்டு, அன்னத்தின் தன்மையை உடையவன் என்றும், அன்னமய கோசத்திலிருப்பவன் என்றும் பொருள் கொள்வோரும் உண்டு. 'அனன்யம்' என்றும் பாடம் ஓதும் ஏடுகள் உண்டு என்பர் பஞ்சாட்சர தீப உரையாசிரியர் மகாவித்துவான். திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள். 'அப்பொருள் ஏற்புடையது ஆயினும் எதுகை ஒத்தின்மையால் கொள்ளப்படா' தென்பர் அவ்வறிஞர். 'அன்மையன் அன்று' என்று பாடங்கொண்டுள்ளது பஞ்சாட்சர தீப உரை. ஆயினும், பாட்டுப்பதிப்பில் 'அன்மையனென்று' பிழையாக உள்ளது; ஒற்றைக்கொம்பு இடையே உற்றமையால் பொருள் முரண் விளைந்துள்ளமை காணலாம். இறைவனைத் தன்னினும் வேறுகாதவனாக உணர்தல் இப்பாட்டில் உரைக்கப்பட்டது. உயிரும் இறையும் எவ்வாறு வேறுபடாற்றவை என்பதை, "அன்னம் இரண்டுள ஆற்றங் கரையினில்" என்னும் பாடல் உருவக அமைப்பில் அழகுற உரைக்கின்றது.

'ஆற்றங்கரையில் இரண்டு அன்னங்கள் உள்ளன; இரண்டும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் ஒன்றில் ஒன்று துன்னியிருப்பன; அவற்றுள் ஒன்று தன்னிலையில் என்றும் நிற்கும் தனிப்பொருள் ஆவது; மற்றொன்று அதனில் வேறுபட்ட அறியாமையோடு கூடிய இயல்புடையது ஆவது. இவற்றை வேறுபட எண்ணுவோர்க்குச் சிவப்பேறு இல்லை' என்பது இங்குச் சொல்லப்பட்டது. சிவனும் சீவனும் என எண்ணுவோர் உண்மையறியார்; அவர்கட்குச் சிவானுபவம் விளங்குதல் இல்லை என்பது கருத்து.

இது அத்துவிதம் என்ற நிலையில் கலப்பினால் ஒன்றாய் நிற்கும் நிலையைச் சுட்டியதாகும்.

"ஒட்டி
அவனுளமாகில்லான் உளமவனு மாட்டாது
அவனுளமாய் அல்லனுமாம் அங்கு" (சூ. 2; அதி. 1)

என்ற சிவஞானபோத வெண்பாவில், 'அவையே யாதலை' மெய்கண்டார் விளக்குதல், இத்திருமந்திர விளக்கம் ஆதல் காணலாம். இவ்வாறு இறைவன் உயிர்களோடு ஒன்ருய் இருக்கும் நிலையையே இத் திருமந்திரத்துள் "துன்னி" என்ற வினையெச்சத்தால் திருமூலர் விளக்கியுள்ளனர்; மெய்கண்ட தேவரும் அதனை நினைவு கூர்ந்தே, பரம்பொருளை, "ஒட்டி" என்னும் சொல்லால் இங்குக் குறித்துள்ளார். "உணரப்படு வாரோடு ஒட்டி வாழ்தி" என்ற திருநாவுக்கரசர் திருவாக்கும் இங்கு நினைக்கத்தக்கது.

அரக்கை உருக்கி அதனேடு சேர்த்த கற்பொடி, அவ்வரக்கி னேடு நன்ருய் ஒருங்கியைந்து நீக்கமின்றி நின்ருற்போல, முதல்வன் உயிர்களோடு ஒருங்குகூடி நின்று விளக்குவன் என்று பிறகும் உவமைகாட்டி மெய்கண்டார் விளக்குவர்:

"அரக்கொடு சேர்த்தி அணைத்தஅக் கற்போல்
உருக்கி உடங்கியைந்து நின்று - பிரிப்பின்றித்
தானே உலகாம்; தமியேன் உளம்புகுதல்
யானே உலகென்பன் இன்று"

(சூ. 2. அதி-1)

கலப்பால் ஒன்ருய் நிற்றல் "உடங்கியைந்து" என்னும் பொருட்டன்மையால் வேருய் நிற்றல், "நின்று" என்னும் உயிர்க்குயிராய் நிற்றல் "பிரிப்பின்றி" என்றும் சுட்டப்பட்டன என்பர், மாபாடிய உரைகாரராம் மாதவச் சிவஞான முனிவர்.

வழிநூலாசிரியராகிய அருணந்தி சிவனர்,

"உலகெலாமாகி, வேருய்
உடனுமாய் ஒளியாய் ஓங்கி
அலகிலா வுயிர்கள் கன்மத்
தாணையி னமர்ந்து செல்லத்
தலைவனுயிவற்றின் றன்மை
தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீ ரமல னுகி
நின்றனன் நீங்கா தெங்கும்"

(சிவஞான சித்தியார் - சூ-2-1)

என்று இதனைப் பின்னும் விளக்கினர்.

சிவப்பிரகாசத்தில், உமாபதி தேவநாயனுர்,

“ புறச்சமயத் தவர்க்கிருளாய்
அகச்சமயத் தொளியாய்ப்
புகல்அளவைக் களவாகிப்
பொற்பணிபோல் அபேதப்
பிறப்பிலதாய் இருள்வெளி போற்
பேதமும் சொற்பொருள் போல்
பேதாபேதமும் இன்றிப்
பெருநூல் சொன்ன
அறத்திறைல் விளைவதாய் ”

(சிவ. பா. 7)

என இவ்வத்துவிதத்தை எடுத்துக்காட்டுக்களால் இனிது விளக்கியுள்ளனர். இப்பாட்டின் பொருளாழம் மாதவச் சிவ ஞான முனிவரால், மாபாடியத்தில் மிக அழகுற விளக்கப் பட்டுள்ளமை சமய உலகம் அறிந்த ஒன்ருகும்.

இனிப் புருடன் என்னுந்தலைப்பில் திருமூலர் வெளிப் படுத்தும் கருத்துக்கள் பல. ஆன்மா, பிரகிருதி மாயைப் போகங்களை நுகர்வதற்கென அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, சினம் என்ற நிலையினை எய்தும்போது புருடன் எனப் படும். அந்நிலையில் அவற்றை விட்டுச் சிவப்பேறு எய்துதற் குரிய வழிமுறைகளை இங்கு உரைக்கின்ருர் எனலாம்.

வைகரி, பைசந்தி, மத்யமை, சூக்குமை என்பன நால் வகை வாக்குக்கள் எனப்பெறும். சிவம், சத்தி, சதாசிவம், மாகேசுவரம், சுத்த வித்யை என்பன சுத்ததத்துவங்கள் எனப் பெறும். கலை, காலம், நியதி, வித்யை, அராகம், புருடன், மூலப் பிரகிருதி என்பன புருடாதி பேதம் எனப்பெறும். இவற்றை அநாதியே செய்தருளினன் இறைவன் என்பர் முதற்கண்.

பரமாணுவை ஆயிரம் பிளவுசெய்து அவ்வாயிரத்துள் ஒன்ருகிய அணுவில் பரமாணுவாகக் கலந்துள்ள சிவஞானத் தைச் சேரவல்லவர்களுக்கே, அணுவுள் அணுவாகவும், முதற் பொருளாகவும் உள்ள சிவபரம்பொருளை, அணுவில் அணு வாய் விளங்கும் பரசிவத்தை அணுகும் வன்மை உளது என்பர் அடுத்து.

( தொடரும் )

# பிரதோஷ விரதம்

வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்

( மலர் 33, இதழ் 4, பக்கம் 213 இன் தொடர்ச்சி )

"விதர்ப்பநாட்டில் சத்தியாதனன் என்னும் அரசன் ஆட்சி செய்துகொண்டிருந்தான். பகையரசர் படையெடுப்பில் மன்னன் இறந்தான். நிறைமாத கர்ப்பவதியாக இருந்த அவன் மனைவி சதி என்பவள் இரவு நேரத்தில் அந் நகரை விட்டுத் தனியளாய் வெளியேறித் -தப்பித்தாள். ஒரு காட்டில் ஒரு தடாகக்கரையில் பிள்ளையைப் பெற்றெடுத்தாள். தண்ணீரருந்த அங்குள்ள மடுவி லிறங்கிய அவள் முதலையால் விழுங்கப்பட்டாள். கரையில் அழுதுகொண்டிருந்த குழந்தையை உமையென்னும் அந்தணப் பெண் எடுத்துச் சென்று 'ஏகசக்கரம்' என்னும்நகரையடைந்து தன் குழந்தையோடு, கிடைத்த அரச குமாரனையும் வளர்த்து வந்தாள். இருபிள்ளைகளும் ஒன்றாக வளர்ந்து கலைகளில் தேர்ந்து கடவுள் பக்தியிற் சிறந்தவராய் விளங்கினார்கள்.

ஒருநாள் சாண்டில்யர் என்னும் முனிவர் உமையிடம் வந்து சத்தியாதனன் என்ற மன்னன் இறந்த காரணத்தையும், அவன் மனைவி காட்டில் கருவுயிர்த்து முதலைவாய்ப்பட்டு இறந்ததையும் அவ்வரசகுமாரன் அவள்வீட்டில் வளர்வதையும் விவரித்தார். சத்தியாதனன் முற்பிறப்பில் மதுரையில் அரசுபுரிந்த பாண்டிய னாக இருந்தானென்றும், பிரதோஷ கால வழிபாட்டு வேளையில் இறைவழிபாட்டை மறந்து தன்னை யெதிர்த்த சோழனை வென்று வெற்றிக்களிப்பில் இறுமாந்திருந்தான் என்றும், இக்குற்றத்தால் மறுபிறப்பில் பகையரசர்களால் அழிந்தானென்றும், இவன் மனைவி ஏனைய மனைவியரை விஷமிட்டுக் கொன்றதால் இப் பிறப்பில் முதலைக்கிரையானாள் என்றும் முற்பிறப்பில் சிவ பூஜையை முற்றச் செய்யாத கீழ் மக்களே இப்பிறப்பில் பிச்சை யெடுத்து உழல்பவர்கள் என்றும், சிவனை நாள்தோறும் வழி படுபவர்கள் சகல போகங்களும் பெற்று வாழ்வர் என்றும் பிரதோஷ காலத்தில் இறைவன் பார்வதிதேவி கண்டுகளிக்க ஆனந்த தாண்டவம் செய்தருளுவர் என்றும், எல்லாத் தேவர் களும் அதனைக் காணச் செல்லுதலால் பிரதோஷ காலத்தில் ஏனைய தெய்வங்களை வழிபடல் கூடாதென்றும் கூறி அப்

பிள்ளைகள் இருவம் பிரதோஷ விரதம் இருந்தால் வறுமைத் துன்பங்கள் நீங்கி வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியடைவர் என்றும் சாண்டில்ய முனிவர் கூறினர்.

அம்முனிவர் உரைப்படி அப்பிள்ளைகள் இருவரும் பிரதோஷ தினத்தில் பகற்பொழுதில் உணவொழித்து மாலைப்பொழுது வரும்வரை ஐந்தெழுத்தை உச்சரித்துக் கொண்டு இறைவனை வழிபட்டுவந்தார்கள். நான்கு மாதங்கள் கழித்து அந்தணச் சிறுவனுக்குப் பெரும்பொருள் கிடைத்தது. வறுமை நீங்கி மகிழ்ச்சியடைந்தான். அரசிளங்குமரன் தனியனாய் ஒருசோலையின் இயற்கையழகில் ஈடுபட்டிருந்தபோது அஞ்சுமதி என்ற கந்தருவப் பெண்ணைச் சந்தித்து அப் பெண்ணின் தந்தை இறைவனருளால் தன்னுட்டையும் அரசாட்சியையும் பெற்றுத் தர மீண்டும் விதர்ப்பதேசத்தை அடைந்து பிரதோஷ விரத பலத்தினால் பெருஞ் சிறப்போடு அரசாட்சி புரிந்தான் என்பது பிரமோத்தர காண்டத்தில் காணப்படும் வரலாறு.

இத்தகைய பிரதோஷ விரதத்தை அன்பர்கள் மேற்கொண்டு பயனுறுவார்களாக.

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

### தருமபுரம் ஆதீனம்

### ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி தேவஸ்தானம், குத்தாலம்.

இன்று குத்தாலம் ஸ்ரீ சொன்னவாறறிவார் திருக்கோயிலில் நடைபெற்ற ஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக் கழக ஆண்டுவிழாவில் பங்குபெறத் திருவருள் கூட்டிவைத்தது. ஸ்ரீ சொன்னவாறறிவார் திருக்கோயிலில் வழிபாடு செய்தோம். தருமையாதீனத்தின் அருளாட்சிக்குரிய இத்திருக்கோயில் மேற்பார்வையாளர்களும், சிவத்திரு சிவாசாரியப் பெருமக்களும் சிறந்த முறையில் வழிபாடு செய்வித்தார்கள். ஆலயத்தை மிகத் தூய்மையாகவும், அழகாகவும் வைத்திருக்கின்றனர். கோவில் பணியாளர்களது பணியைப் பாராட்டுகிறோம்.

(S-d) சுந்தரசாமிகள்,
23—3—74. கௌமார மடாலயம், கோவை - 6.

# உளர் புகலாமே

நீதிபதி, கனம். எஸ். மகராஜன் பி. ஏ., பி. எல்.,

பலாப்பழத்தை அறுத்துச் சுளையை எடுப்பதற்குமுன் கையெல்லாம் பிசினாகிவிடுகிறது ஆனால், கையில் தைலத்தைத் தேய்த்துக்கொண்டு பலாப்பழத்தை அறுக்கும்போது பிசின் கையில் ஒட்டுவதில்லை.

மனித வாழ்க்கையை வாழ்ந்து பார்க்கும்போது விதம் விதமான பிசின் வந்து நம்மோடு ஒட்டுகிறது. உடம்பிலும் உள்ளத்திலுமே பிசின் ஒட்டிக்கொள்கிறது. ஆனால், பக்தி என்ற தைலத்தைப் பூசிக்கொண்டு, வாழ்க்கை நடத்தினோமானால், வாழ்க்கைப் பிசின் நம்மை ஒட்டுவதுமில்லை, பாதிப்பதுமில்லை யென்று சொன்னார் ராமகிருஷ்ண பரமஹம்சர்.

பக்தியைக் கேவலம் ஆணவ அறிவினாலே வளர்க்கமுடியாது. கற்க கற்கப் பலருக்கு ஆணவத் தடிப்பு பெருகி, உணர்வு குறைகிறது.

மாணிக்கவாசகரைப் போன்ற ஞானிகள் சிறந்த கல்வி படைத்தவர்களாயிருந்தார்கள். இருந்தாலும், கல்வியின் உடும்புப் பிடியிலிருந்து அவர்கள் விடுபடுவதற்குள் படாதபாடு பட்டார்கள்.

" கல்வியென்னும் பல்கடற் பிழைத்தும் "

என்றார் மாணிக்கவாசகர் " ஏழேழு கடலைப் போலப் பரந்து கிடக்கும் கல்வியின் மோகத்தில் நான் மூழ்கி ஒழிந்து போகாமல், இறைவனே, உன் சந்நிதானத்துக்கு என்னை இழுத்துக் கொண்டு வந்துவிட்டாயே, உன்னுடைய கருணையே கருணை !" என்று உருகிப் போற்றுகிறார் மாணிக்கவாசகர்.

இதே அனுபவத்தைத் திருமூலரும்,

" கற்றன விட்டேன்
கழல்பணிந் தேனே "

என்று சொல்லி மறுகுகிறார்.

ஓரளவுக்கு மனிதன் உயரும் வரை கல்வி பயனுள்ளதாகவே இருக்கிறது. அதற்குமேல் அவனை வளரவொட்டாமல் அது தடுக்க முயலுகிறது. சமயக் கல்விகூட, பெரும்பாலும், ஆணவத்துக்கு ஊட்டம் கொடுத்து ஆன்ம வளர்ச்சிக்குத் தடையாக நிற்கிறது. ஆகவேதான். நமது முன்னோர்கள் கல்வியை எவ்வளவு மதித்தாலும், அதைக் கொஞ்சம் சந்தேகக் கண்ணோடு பார்த்தார்கள். உணர்வைத் தீட்டித் தீட்டி வளர்க்க வேண்டும். கல்வி உணர்வுக்கு இடையூறாய் நிற்காமல் பார்த்துக்கொள்ளவும் வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

சமயப் படிப்பிலே சிறந்த பல பெரியோர்கள், புறச் சமய தூஷணையில் இறங்கிவிடுவதை நாம் பார்க்கிறோம். எந்தச் சமயத்தைச் சேர்ந்திருந்தாலென்ன ? எந்த வகுப்பில் பிறந்திருந்தாலென்ன ? இறைவனோடு உணர்வினால் ஒன்றிவிட்டால் போதும், சிவபுரத்தை அடைந்துவிடலாம் என்ற கருத்தை அழுத்தமாக எடுத்துச் சொல்லுகிறார் திருமூலர்.

“ இத்தவம் அத்தவம் என்று இரு பேரிடும்
பித்தரைக் காணில் நகும் எங்கள் பேர்நந்தி
எத்தவ மாகிலென் எங்குப் பிறக்கிலென்
ஒத்துணர் வார்க்கு ஒல்லை ஊர்புக லாமே ”

எந்தச் சமயத்தில் இருந்துகொண்டு தேடினாலும் இறைவனை அடையலாம். ஆனால், அன்போடு அவனைத்தேட வேண்டும். உருக்கத்தோடு அவனை நாடவேண்டும். உணர்ச்சிப் பெருக்கிலே அவனோடு கரையவேண்டும். கேவலம் வறட்டுத் தத்துவ மல்யுத்தம் செய்தோ, அறிவுப் பேயாட்டம் ஆடியோ செம்பொருளைக் காண முடியாது. தர்க்கச் சமர் செய்து, கர்வ வீக்கம் பெற்று அஞ்ஞானக் குழியில் இடறி விழும்புலவர்களை “வாதநோயாளர்” என்றழைத்தார் ராமலிங்க அடிகள். வாதநோய்க்கு ஒரே மருந்து பக்தி. பக்திப் பரவசத்திலே திருமூலர் என்ன செய்கிறார் ?

“ அன்பு ளுருகி அழுவன் அரற்றுவன்
என்பு முருக இராப்பகல் ஏத்துவன்
என்பொன் மணியை இறைவனை ஈசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே ”

இறைத்தத்துவத்தோடு நெருங்கிப் பழகியவர்கள் தான், திருமூலரைப்போல இப்படிக் காதல் பாஷையில் பாட முடியும்.

“ என்பொன் மணியை, இறைவனை ஈசனைத்
தின்பன், கடிப்பன், திருத்துவன் தானே ”

# இலங்கை திருக்கேதீச்சரம் - : :
# : : - திருப்பெருந்துறையா ?


வித்துவான், திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்


ஈழநாட்டு (இலங்கை) வடபகுதியில் வடகடல் தலைமன்னுரின் வடமேற்கே சுமார் 6½ கல் தொலைவில் வடகடல் ஓரமாகப் பண்டைக்காலத்து மாதோட்டம் (மாந்தைநகரம்) என்ற ஊரில் திகழும் சிவாலயமே திருக்கேதீச்சரம் என்பதாம். இச்சிவத்தலம் திருக்கயிலைச் சிகரங்களில் ஒன்று எனவும், கேது என்பவனுல் பூசிக்கப்பெற்றது எனவும் தலபுராணம் கூறும். [கேது + ஈச்சரம் = கேதீச்சரம். ஈச்சரம் — கோயில். திரு — அடைமொழி] மாதோட்டம் என்பது ஊரின் பெயர். திருக்கேதீச்சரம் என்பது சிவாலயத்தின் பெயர். தற்போது மாதோட்டம் என்ற சொல் அருகித் திருக்கேதீச்சரம் என்ற பெயரே வழங்கி வருகிறது.

இம்மாதோட்ட நன்னகர் (மாந்தை நகரம்) கி. பி. 13 ஆம் நூற்ருண்டுவரை பெருவளத்துடன் கடல் வாணிபத்துறையிலும் சிறந்து விளங்கியது. கி. பி 7 ஆம், 9 ஆம் நூற்ருண்டுகளில் முறையே திருஞானசம்பந்தரும், சுந்தரரும் தத்தம் தேவாரப் பதிகங்களில் பற்பல வளங்களுடன் மாதோட்டம் கடல் வாணிபத்துடன் திகழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றனர்.

இம்மாதோட்டம் என்ற ஊர், கி. மு 6 ஆம் நூற்ருண்டின் முன்னரே 'மகாதித்தா' என்று வழங்கியதாக மகாவம்சம் கூறுகிறது. பாலிமொழியில் 'தித்தா' என்பது இறங்கும் துறை (இடம்), அல்லது பெரிய துறைமுகம் - பெருந்துறை என்பது பொருள் என்பர். இச்சொல்லின் பொருளைக்கொண்டே மாதோட்டநகர் இலங்கைக்குரிய கப்பல் துறைமுகம் என்பதை அறியலாம்.

கி. மு. 3-ஆம் நூற்ருண்டிற்கு முன்னரே உரோமானியர், கிரேக்கர், சீனர், அரேபியர் முதலியோர் கடல் மார்க்கமாக வந்து தங்கிப் பண்டம் மாற்று வியாபாரம் செய்த இடமாக கடல் துறைமுகமாக மாதோட்டம் விளங்கியது. இதனைக்

கொண்டுதான் மாதோட்டநகர் பெருந்துறை என்று வழங்கியது போலும். மாதோட்டம் ஒரு சிறந்த புண்ணிய சிவத்தலம். ஆதலால் அதனை, திரு என்ற அடைமொழி, கொடுத்துத் திருப்பெருந்துறை என்றும், திருக்கேதீச்சரப் பெருமானைத் திருப்பெருந்துறை ஈசன் என்றும் சைவ நன்மக்கள் அழைத்தனர் போலும்.

மாதோட்டத்தைச் சிறந்த ஒருபுண்ணியத் தலமாக இலங்கை நாட்டு மன்னர்களும், பௌத்த பிட்சுக்களும், பௌத்தமதத்தினர்களும், பிறரும் கருதி கி. மு. 3 ஆம் நூற்றாண்டின் முன்னரே அதற்கு மகாதிர்த்தம் என்ற பெயரையும் வழங்கிப் போற்றி வந்தனர். இதனை, "பௌத்த ஆலய பரிபாலன விதியை மீறி நடப்போர் மாதோட்டத்தில் (மகாதீர்த்தத்தில்) ஒரு பசுவைக் கொன்ற பாவத்தை அடைவாராக" எனவரும் கதிர்காமக் கல்வெட்டு ஒன்றால் அறியலாம். 4 ஆவது மகிந்தனின் அநுராதபுரக் கல்வெட்டு ஒன்றில் மாதோட்டம் ஒரு சிறந்த புண்ணியத் தலம் என்று கூறப்பெற்றுள்ளது. இங்குள்ள பாலாவிநதி புனித தீர்த்தம்.

மூர்த்தி, தீர்த்தம், தலம் இம்மூன்றும் விசேடித்த மாதோட்ட நன்னகரில் ஆதியில் (வரலாற்றுக் காலத்திற்கு முன்னர்) இராவணன் மாமனாகிய மயன் என்பவன் வாழ்ந்து வந்தான் என்பது பண்டைய வரலாறு. அம்மயன் மகள் மண்டோதரி (வண்டோதரி) என்பவள். அவள் முற்பிறவி வாசனையால் இளமையிலே மாதோட்டத் திருக்கேதீச்சர நாதனிடம் பெரும் பக்திபூண்டு சிவாகம முறைப்படி சிவபூசை (ஆன்மார்த்த சிவலிங்க பூசை) செய்து வருவாள்; இராவணனை மணந்து வாழுங்காலத்திலும் சிவபூசையினை மறவாது செய்துவருவாள். ஒருநாள் சிவபூசை முடிவில் இறைவனை நேரில் தரிசிக்க மண்டோதரி விரும்பிப் பலவாறு தோத்தரித்து வேண்டி வருந்தி அழைக்க சிவபெருமான் அவள் வேண்டுகோளுக்கு இரங்கி அருள்செய்ய அவள் முன்னே சிறு குழந்தை வடிவில் எழுந்தருளி வந்து கிடந்தார். அச்சமயம் அங்கு வந்த இராவணன் சிவனாகிய குழந்தையைக் கண்ணுற்று மகிழ்ந்து தூக்கி எடுத்து உச்சி மோந்து பெருமகிழ்ச்சியுற்றான். அவன் மனைவி மண்டோதரியும் கணவன் கையில் உள்ள சிவக்குழந்தையைப் பெற்றுப் பாராட்டிப் பேரானந்தமுற்றாள்.

இச்சரித வரலாற்றை உத்தரகோசமங்கைத் தலபுராணம் கூறுகிறது. இக்கருத்தை உணர்த்தவந்த வாதவூரடிகள் தமது திருவாசகம் தில்லையில் அருளிய குயிற்பத்து 2 ஆவது பாட்டில்,

"......ஆர்கலி சூழ் தென்னிலங்கை அழகமர்வண்டோதரிக்குப் பேரருள் இன்பமளித்த பெருந்துறை மேய பிரானை" என்ற அடிகளில் கூறுகின்ஞர். இங்குச் செய்யுள் ஆதலால், பெருந்துறை என்பது திரு என்ற அடைமொழி பெருது நின்றது என்பர்.

இப்பெருந்துறை - திருப்பெருந்துறை என்பது இலங்கை - மாதோட்டப்பெருந்துறையினையா? அல்லது பாண்டி நாட்டுத் திருப்பெருந்துறையினையா (ஆவுடையார் கோயிலின) குறிப்பது என்பதுதான் கேள்வி.

திருவாசகம் - குயிற்பத்தில், 'பெருந்துறைமேய பிரானை" என்று பொதுவாகக் குறிப்பிட்டுள்ளதில் பெருந்துறை மேய பிராஞகிய மாதோட்டத் திருக்கேதீச்சரப் பெருமானே தான் மதிலிலங்கை மண்டோதரியிடம் சென்று அருள்புரிந்தார்; அவர் இன்ன அருளைப் புரிந்தார் என்று நூல்களால் அறிதற்கில்லை என்கின்றனர் ஒருசிலர். நிற்க.

திருவாசகம் - திருப்பெருந்துறையில் அருளிய திருவார்த்தை 5 ஆவது பாட்டில் "......எங்கள் பரமன் பெருந்துறை ஆதி அந்நாள், உந்துதிரைக்கட லைக்கடந்து அன்று ஓங்கு மதிலிலங்கை அதனில், பந்தணை மெல்விர லாட்கு அருளும் பரிசு" என வருவதில், மதில் இலங்கை - பந்தணை(யும்) மெல்விரலாள்" என்பது மண்டோதரியையே குறித்து நிற்கும். 'அந்நாள் பெருந்துறை ஆதி உந்து திரைக்கடலைக் கடந்து' என்பதில், முன்ஞெரு காலத்தில் பாண்டிநாட்டுத் திருப்பெருந்துறை ஆதியாகிய ஆத்மநாதரே மண்டோதரியின் வேண்டுகோளுக்கு இரங்கித் தென்கடலைக் கடந்து சென்று இலங்கையின அடைந்து அவளுக்கு அருள் புரிந்தார் என்றுதானே பொருள்கொள்ள இடம் தருகிறது. இங்கே, 'உந்துதிரைக் கடலைக்கடந்து' என்று குறிப்பிடாமல் 'ஓங்குமதில் இலங்கை' என்ற சொற்களை மட்டும் குறிப்பிட்டிருந்தால் ஒருவித ஐயமும்கொள்ள இடமில்லையே. குயிற்பத்தில் 'பெருந்துறை மேய பிரானை' என்பதற்குத் திருக்கேதீச்சரப்பெருமான் என்று குறிப்பிட்டதுபோல இங்கே அவ்வாறு கூறுதற்கு இடமில்லையே. ஆகவே இங்கு, திருப்பெருந்துறை ஆத்மநாதரைத்தானே குறிப்பிட இடம் தருகிறது. ஆராய்க.

இங்குத் திருக்கேதீச்சரப்பெருமானும் திருப்பெருந்துறை ஆதியாகிய ஆத்மநாதரும் அருள் செய்வதில் வேறல்லர்; ஒருவரே ஆவர்.

ஸ்காந்தபுராணம் - தக்ஷிண கயிலாய மான்மியம், இரண்டாம் அத்தியாயம் - திருக்கேதீச்சரத் தலமான்மியத்திலும், திருக்கேதீச்சரத் தலபுராணத்திலும் மண்டோதரிக்குத் திருக்கேதீச்சுவரர் அருள்புரிந்ததாக வரலாறு ஒன்றும் இல்லை. திருவாசகத்தில் பற்பல இடங்களில் சிவத்தலங்கள் குறிப்பிடப்பெறுகின்றன. அவற்றில் ஒரு இடமேனும் மாதோட்டம் என்றோ' கேதீச்சரம் என்றோ வரவில்லை.

பெருந்துறை என்பது கடல் துறைமுகம் உள்ள இடத்தை அல்லவா குறிப்பது. பாண்டிநாட்டுப் பெருந்துறை - திருப்பெருந்துறை அருகு கடல் துறைமுகம் இல்லையே என்பார்க்கு இப்பெருந்துறை காயச்சிறைக்கலம் (உடலாகிய மரக்கலம்) பிறவிக் கடலில் வீழாமலும், இறங்காமலும் நின்று முத்திக்கரை (மோட்சம்) ஏற உதவுவது. இத்தலத்தைத் தரிசித்து வழிபடுபவர்க்குப் பிறவித் துன்பம் இல்லை எனத் திருப்பெருந்துறை புராணம் கூறுகிறது.

மாதோட்டம் - பெருந்துறை என்ற பெயர் போலத் தமிழ் நாட்டிலும் பல பெருந்துறைகள் உள்ளன. அவையாவற்றையும் திருவாசகம் குறிப்பிட்டு நின்றது என்று கூற இயலுமா? இயலாது.

கி. பி. 10 ஆம் நூற்றுண்டில் முதலாம் இராசராசன் மகன் இராசேந்திரசோழன் ஈழத்தைக் கைக்கொண்டபோது இம் மாதோட்டநகர் (மாந்தைநகர்) இராசராசபுரம் எனவும், திருக்கேதீச்சர ஆலயம் இராசராசேச்சுரம் எனவும் பெயர் பெறலாயிற்று என்றும் மாதோட்டராசராசபுரம் சுமார் 10 சதுரமைல் பரப்புடையது என்றும் ஒரு கல்வெட்டு கூறுகிறது.

தமிழ்நாட்டுத் தஞ்சைமா நகரில் (தஞ்சாவூரில்) முதலாம் இராசராசசோழனுல் கட்டப்பெற்ற தஞ்சைப் பெரியகோயில் இராசராசேச்சுவரம் என்ற பெயருடன் ஒன்று விளங்குகிறது. ஆகவே, சோழநாட்டு - இராசராசேச்சுவரம் வேறு: ஈழநாட்டு இராசராசேச்சுவரம் வேறு என்பது போலவே, பாண்டிநாட்டுப் பெருந்துறை வேறு; ஈழநாட்டு மாதோட்டப் பெருந்துறை வேறு என்க

சிவபக்தியில் சிறந்த இராவணன் மனைவி மண்டோதரிக்கு அருள் புரிந்தவர் திருக்கேதீச்சரர் அல்லர். பாண்டிநாட்டுத் திருப்பெருந்துறை ஆதியாகிய ஆத்மநாதரே ஆவர் என்பது திருவாசகத்தின் முடிபாம்.

# மதுரையில் சித்திரைத் திருவிழா

## திரு. என். இராமகிருஷ்ணு

"ஒவ்வொரு மாதமும் திருவிழா. ஒவ்வொரு நாளும் விசேஷம்" என்ற சிறப்பிற்குரிய தலம் மதுரை. அந்த ஊருக்குப் புதிதாகப் போனல் வீதியின் பெயரைக் கேட்டாலே போதும். திருவிழாவைப் பற்றித் தெரிந்துகொள்ளலாம். 'இது ஆவணி மூல வீதி' 'இது ஆனித்திருமஞ்சன வீதி' 'இது ஆடிப்பூரவீதி' என்று வரிசையாகக் கேட்கலாம்.

சித்திரை மாதத்தில் மதுரையில் தேர்த்திருவிழா நடைபெறும். திருக்கோயில் மிகப்பெரியது. மீனுட்சி அம்மன் சந்நிதிக்குப்போய் நின்று விட்டால் அப்புறம் உலக நினைவே வருவதில்லை. கோயிலுக்குள் பொற்ருமரைக்குளம் என்ற தீர்த்தம் இருக்கின்றது. அதைச் சுற்றிலும் மதுரைப் பெருமானுகிய ஸ்ரீ சோமசுந்தரப்பெருமான் இயற்றியருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் ஓவியமாகத் தீட்டியுள்ளார்கள்.

இப்போதுள்ள பிரம்மாண்டமான விசாலமான மண்டபங்களும் மற்றைய அமைப்புக்களும் திருமலை நாயக்கரால் கட்டப்பட்டவை. அந்த மண்டபங்களில் அற்புதமான சிற்ப உருவங்களைத் தூணுக்குத் தூண் காணலாம்.

தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடையதாய், பாண்டிய மன்னர்களின் தலைநகரமாய், தமிழ்த்தாயின் அரசிருக்கை நகரமாய் விளங்கிய பெருமை உடையது மதுரை. சங்க காலம் முதற்கொண்டு இன்று வரையில் தன் பெருமை மங்காது தெய்வ அருளும் தமிழ்ச் சிறப்பும் செல்வ வளமும் மலிந்து விளங்குவது இந்த மாநகரம்.

பத்துப்பாட்டில் ஒன்ருகிய மதுரைக் காஞ்சி என்னும் நூலில் பழங்காலத்து மதுரையைப் பற்றிய வருணனைகளையும் இறைவனுக்குத் திருவிழா நடந்த செய்திகளையும் அதில் விரிவாக்க் காணலாம். தமிழ்ப் பாடல்களை மிகுதியாகப்பெற்ற நகரம் இது.

ஸ்ரீ மீனாட்சி அம்மையும் சுந்தரேசக்கடவுளும், முருகனுடைய திருஅவதாரமாகிய உக்கிரகுமாரபாண்டியரும் ஒருவர்பின் ஒருவராக ஆட்சி புரிந்த இடம் மதுரை. திருஞானசம்பந்தப் பெருமான் சைவத்துக்கும் தமிழுக்கும் உரிய பெருமையை நிலை நாட்டியதும் இத்தலமே. மாணிக்கவாசகர் மந்திரியாக இருந்த இடம் இதுவே. அவருக்காக இறைவன் பிட்டுக்கு மண்சுமந்து பாண்டியனுடைய பிரம்பினால் அடிபட்ட திருத்தலம் இதுவே. சைவர்களுடைய பாராயண நூல்களில் ஒன்றாகிய திருவிளையாடற் புராணம் என்பது இத்தலத்தின்பெருமையைச்சொல்வதே. இந்த க்ஷேத்திரத்தின் மாகாத்மியத்தைச் சொல்லும் வடமொழி தென்மொழி நூல்கள் மிகப்பல; சிறிய பிரபந்தங்களும் எண்ணிறந்தவை.

திருக்கோயிலில் இன்றைக்கும் சங்கத்தார் திருக்கோயில் என்ற ஒரு கோயில் இருக்கிறது. அங்கே கடைச்சங்க புலவர்களாகிய நாற்பத்தொன்பது பேர்களின் திருஉருவங்களை வைத்துப் பூசித்து வருகின்றார்கள்.

இந்தத் தலத்திற்கு நான்மாடக்கூடல், திருவாலவாய், கடம்பவனம் முதலிய பல பெயர்கள் உண்டு. சிவபெருமானுக்குச் சுந்தரன், கடப்பவனசுந்தரன், கற்பூரசுந்தரன், மீனாட்சிசுந்தரன் ஹாலாஸ்யசுந்தரன் என்று பல பெயர்கள் உண்டு. அப்படியே மீனாட்சி அம்மைக்கும் கற்பூரவல்லி, அபிஷேகவல்லி, மாணிக்கவல்லி, அங்கயற்கண்ணி முதலிய பல திருநாமங்கள் உண்டு.

இறைவன் எழுந்தருளியிருக்கும் இடத்திற்கு இந்திர விமானம் என்று பெயர். அது அஷ்ட கஜங்களால் தாங்கப் பெற்றது. முதல் முதல் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை இந்திரன் பூஜித்து வழிபட்டு இந்த விமானத்தை இங்கே நிறுவினான் என்பது புராணம்.

அம்பிகை மலையத்துவச பாண்டியன் என்னும் மன்னனுடைய வேள்வியில் இளம் பெண்குழந்தையாக எழுந்தருளி அவனுடைய திருமகளாக வந்தாள். தடாதகாதேவி என்ற திருநாமத்தோடு விளங்கினாள். மலையத்துவஜ பாண்டியன் அப் பெண்ணுக்கே முடிசூட்டினான். மீனாட்சி அம்மை மிகச் சிறப்பாக ராஜ்ய பாரம் நடத்தி வந்தாள். திக்கு விஜயம் செய்யப் புறப்பட்டு எல்லாத் திசைகளிலும் உள்ள மன்னர்களை வென்று வடக்கே கயிலாயத்துக்குச் சென்றாள். அங்கே நந்தி கணங்களை தோல்வியுற்றோடச் செய்தாள். சிவபெருமான் எதிர்ப்பட்ட

போது நாணம் கொண்டு நின்றுள். அப்பால் இறைவன் மீனுட்சி அம்மையை மதுரை மாநகரத்தில் திருமணம் செய்து கொண்டருளினர். அதன்பின் அவரே சுந்தரபாண்டியன் என்ற திரு நாமத்தோடு அரசாட்சியை ஏற்று நடத்தினர். அவர் குமாரணுகிய உக்கிரகுமாரபாண்டியனுக முருகப்பெருமானே திரு அவதாரம் செய்து பாண்டிய மண்டலத்தை ஆண்டார்.

இந்திரன் பூஜை செய்த திருக்குளத்தில் பொன் நிறம்பெற்ற தாமரை ஒன்று பூத்தது. அதனுல் அதற்குப்பொற்ருமரைத் தீர்த்தம் என்று பெயர் உண்டாயிற்று. ஒரு நாரையினுடைய வேண்டுகோளால் இக்குளத்தில் மீனே இல்லாமல் செய்து விட்டான் இறைவன் என்பார்கள்,

இங்கே நடராஜ பெருமான் எழுந்தருளியிருக்கும் இடத்திற்கு வெள்ளி அம்பலம் என்றுபெயர். இங்கே அவர்காலைத் தூக்கி நடமாடுகின்ருர். ஒரு பாண்டியனுக்காக இவ்வாறு கால் மாறி ஆடினர் என்று கூறுவர்.

நந்தியைச் சுற்றியுள்ள தூண்களில் மீனுட்சிகல்யாணம், அகோர வீரபத்திரர், காளி, நடராஜர், திருபுரசம்ஹாரம், இராவணன் கயிலையை எடுக்கும்காட்சி ஆகிய சிற்பங்கள் மிகச் சிறப்பாக உள்ளன. இப்படியே ஆயிரக்கால் மண்டபத்திலும் பலசிற்ப உருவங்கள் உண்டு. சிற்பங்களின் நுட்பங்களைக் கருத்தூன்றிக் கவனிக்கவேண்டுமானுல் மதுரையில் பலநாட்கள் இருக்கவேண்டும்.

உற்சவ காலத்தில் இங்கே அழகர் வைகையாற்றுக்கு எழுந்தருளுவார். அவர் மீனுட்சி அம்மையின் திருக்கல்யாணத்திற்குச் சீர்களுடன் எழுந்தருளியதாகவும் வைகையில் இறங்கும்போது திருமணம் ஆகிவிட்டதாகத் தெரிந்து திரும்பவும் சென்றுவிட்டதாக ஓர் ஐதிகம் உள்ளது. இது ஒவ்வோராண்டும் நடைபெறுகின்றது. "அழகர் ஆற்றில் இறங்கும்" இவ்விழாவிற்குப் பல்லாயிரக் கணக்கான மக்கள் வருவார்கள். அழகர்மேல் தண்ணீர் வீசுவதற்காகச் சிலர் இருக்கின்ருர்கள். அவர்கள் தங்களை நன்ருக அலங்காரம் செய்துகொண்டு தோலினுலான தண்ணீர்ப் பைகளுடன் வருவார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன் ரோஸ்பீட்டர்ஸ் என்பவர் இங்கு கலெக்டராக இருந்தார். ஒருநாள் தம் மாளிகையில் அவர் உட்கார்ந்து இருந்தபோது ஒரு சிறுபெண் வந்து "இங்கே இராதீர்கள் வெளியே வாருங்கள்" என்று வெளியே அழைத்து

வந்தாள். வெளியே கலெக்டர் வந்தவுடன் அந்த மாளிகை இடிந்து விழ்ந்துவிட்டது. அப்பெண்ணைக் காணவில்லை. மீனாட்சி அம்மையே தன்னைக் காப்பாற்றியதாக அந்தக் கலெக்டர் நம்பினார். அம்பிகைக்குத் தங்கச் சங்கிலி ஒன்று செய்துவைத்தாராம். சிலர் தங்கசேணம் என்கின்றனர்.

தருமை ஆதீனத்திற்கும் மதுரைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தருமபுர ஆதீனக் குருமுதல்வர், ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் மதுரைப் பொற்றாமரைத் தடாகத்திலிருந்து இறையருளால் எடுத்துப் பூஜித்த சிவலிங்கத் திருவுருவமே இன்றும் தருமையில் ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானம் அவர்களது ஆன்மார்த்த பூஜாமூர்த்தியாக விளங்கி வருகிறது.

மதுரைக் கோவில் சிறப்பாகத் திருப்பணி செய்யப்பட்டு, 1963இல் மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது. பல லக்ஷக் கணக்கான மக்கள் இவ்வைபவத்தைக் கண்டுகளித்தனர். மறுபடியும் 1974இல் கும்பாபிஷேகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுகிறது 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் செய்வது சிறப்பானதாகும்.

---

## EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

"The serenity of the temple, the beauty of those prayers by great rishis - the sound of the Lord's words echo in our hearts forever."

(Sd.) Mrinalini Vikram Sarabhai,
(Chidambaram)

23—3—74. Ahmedabad - 13. Gujarat.

# சிவஞானசித்தியார் தெளிபொருள்விளக்கம்

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக்கலைமணி
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

( மலர் 33. இதழ் 4. பக்கம் 201 இன் தொடர்ச்சி )

இனி, அவர், தமக்கு எதிர்ப்பக்கத்தவராய் உள்ளாரை மறுக்குமாறு கூறுவான் தொடங்கி, முதற்கண் அதனைத் தொகுத்துக் கூறுகின்றார்.

17. இப்படி யன்றிக் கன்மம் உயிர் இறை வேறுண் டென்று
செப்பிடும் அவர்க்கு மண்ணோர் செய்திடும் குற்றம் [ என்னோ !
ஒப்பிலா மலடி பெற்ற மகன்ஒரு முயற்கொம் பேறித்
தப்பில்ஆ காயப் பூவைப் பறித்தமை சாற்றி னாரே

### இதன் தெளிபொருள்

உண்மையை யாம் மேற் கூறியபடி உள்ளவாறு கூறாமல், சமய வாதிகள், 'காட்சிப் பொருள்கட்கு வேறாய், அனுமானம், ஆகமம் என்னும் அளவைகளால் அறியப்படுகின்ற கன்மம் உயிர், கடவுள் என்னும் அழிவில் பொருள்கள் உள்ளன' என்று சொல்லி, யாதும் அறியாப் பொதுமக்களை, அவர்கள் தமக்கு யாதொரு குற்றமும் செய்யாதிருக்கவும் அறியாமையிருளில் ஆழ்த்திவருதல், அந்தோ ! இரங்கத் தக்கது. ஏனெனில்,

அவ்வாதிகள் செய்யும் சொற்சாலங்கள் யாவும், 'தாய்மை உடையவள் என்று ஒருவராலும் ஒப்புக்கொள்ளாது இகழப்படும் மலடி பெற்ற மகன் ஒருவன் முயற் கொம்பின்மேல் ஏறி நின்று தன் கைக்குத் தப்பாது அகப்பட்டு நின்ற ஆகாயத் தாமரை மலரைப் பறித்தான்' என்று சொல்லிப் புகழ்தல் போல்வதொரு, பொருளொடு புணராப் பொய்ம்மொழியேயாய்க் கிடத்தலின்.

### விளக்கம்

'செப்புவோர்' - முக்காலத்தும் உண்மையின், குற்றம் செய்தலையும் முக்காலமும் படக் கூறினார்.

பறித்தமை - பறித்த செயல். என்றது, 'அதனோடு ஒப்பிக் கத்தக்க செய்தி' என்றவாறு. ஏகாரம், ஈற்றசை. இறுதிக்கண் 'ஆகலான்' என்னும் சொல்லெச்சத்தை வருவிக்க.

'அச் சமய வாதிகள் கூற்றில் ஒரு சிறிதும் உண்மையில்லை' என்பது உவமானத்தாற் கொள்ளப்படும் பொருள். ஆகவே, 'சமய வாதிகள் கூறுவன, ஒன்று அறியாமை வழிப்பட்டவை; அல்லது பிறரை வஞ்சிக்கும் உரை' என்பது அவர் கருத்து. இக் கருத்துப் பற்றி அவர் கூறுவன சில வருமாறு :-

'கற்பின் சிறப்பு முதலியவை, ஆண்மையின்றி, அறிவு மாத்திரம் உடையோரால் சொல்லப்பட்டவை. பொன்னும், நிலமும், ஆவும், உண்டியும் முதலாகிய கொடைகளின் சிறப்பு முதலியவை, முயற்சியின்மையால் வறுமையுற்று வருந்தினோரால் சொல்லப்பட்டவை. சாலை, சோலை, தண்ணீர்ப்பந்தர், கிணறு, குளம் முதலியவற்றை ஆக்குதற் சிறப்புக்கள், ஓரிடத்தில் நிலைத்து வாழாது நாடு திரிந்தோரால் சொல்லப்பட்டவை.

இன்னோரன்ன பிறவும் கூறுவர்.* (6)

இனி வினை உண்மை கூறுவாரை அவர் மறுக்குமாறு நான்கு செய்யுளால் வகுத்துக் கூறுகின்றார்.

18. செய்திடும் கன்மம் எல்லாம் செய்தவர் தம்மைப் பற்றி
எய்திடும் என்னில், இங்கேமாய்ந்திடும்; ஏய்வதெங்ஙன்?
மெய்தரு தூலங் கெட்டுச் சூக்கமாய் மேவும் என்னில்,
ஐயனே, தீபம் போனால் அதன்ஒளி ஆவ துண்டோ !

### இதன் தெளிபொருள்

செய்யப்படும் செயல்கள் யாவும் செய்தவரைப் பற்றிக் கொண்டு, அவர் பிறக்கும் பிறவிகளில் எல்லாம் உடன்சென்று நீங்காது நிற்கும் என்னில், செய்யப்படும் செயல்கள் யாவும் செய்த இடத்திலே செய்த அப்பொழுதே அழிதல் அனைவராலும் அறியப்பட்டது. அங்ஙனமாக, அழிந்த அவை பின்னும் பற்றித் தொடரும் என்றல் எவ்வாறு ?

அழிவது தூல ரூபமே (பரு நிலை) யன்றிச் சூக்கும ரூபம் (நுண்ணிலை) அன்றாகலின், அச் சூக்கும ரூபம் பின்னர்ப்பற்றித் தொடர்தற்குத் தடையில்லை எனின், அங்ஙனம் கூறுதல், 'விளக்கு அணைந்த பின்பும் அதன் ஒளி சூக்கும வடிவில் நின்று இருளைப் போக்கும்' என்று கூறுதலோடு ஒப்பதாய்ப் பொருளற்ற சொல்லாம்.

* இவற்றைச் சிவஞானபோத அவையடக்க மாபாடியத்து உலகாயத மதங்கொண்டு உணர்க.

### விளக்கம்

"ஐயன்" என்ற உயர்வுச் சொல், இங்கு இகழ்ச்சியை உள்ளுறையாகக்கொண்டு நின்றது. ஐயன் - தலைவன்; அறிவால் மிக்கவன். தூலம் அழியச் சூக்குமம் நிற்கும் என்றற்குச் சான்றில்லை என்பது கருத்து. காட்சியைத் தவிரப் பிற வற்றை உலகாயதர் அளவையாகக் கொள்ளாமை இங்கு நினைவு கூரத் தக்கது. (7)

19. மாய்ந்துபின் வயலில் இட்ட வைதழை பலிக்குமாபோல்
ஏய்ந்திடும் கன்மம் என்னில் இட்டிடத் திசையும்; மேனி
ஒய்ந்துவந் தவரை உண்ணப் பண்ணுஞ்சோ றுதரத் [தற்றால்
வாய்ந்திடும் மலம்வ யிற்றிற் கொண்டிடும் வழக்கு [வைத்தாய்.

### இதன் தெளிபொருள்

தூலம் அழியச் சூக்குமம் நிற்றற்கு, வயலில் இடப்பட்ட வைக்கோல், தழை முதலியவற்றின் தூல வடிவம் அழிந்த பின்பும் அவற்றின் சூக்கும ஆற்றல் நின்று பயன் தருதலே போதிய சான்றும் ஆதலின், தூலம் கெட்டபின் சூக்குமம் நிற்கும் என்றற்குச் சான்றில்லை என்றல் பொருந்தாது எனின்,

அவ்வுவமை இவ்விடத்திற்குப் பொருந்தாது. ஏனெனில், வைக்கோல், தழை முதலியன, இடப்பட்ட வயலிடத்தன்றி வேறு வயலில் சென்று பயன் தரக் காணாமையானும், வினை யுண்மை கூறுவாரது கொள்கை, ஓர் இடத்திற் செய்யப்பட்ட வினை அவ் விடத்தில் தூலம் அழியினும் சூக்குமம், சேயதாகிய வேறிடத்தில் சென்று பயன் தரும் என்பது ஆகலானுமாம்.

"வயலில் இட்ட வை தழை மாய்ந்து பின் பலிக்குமாபோல்" என்ற உவமை பொருந்தாதாகவே, ஓர் இடத்தில் கெட்ட வினை பிறிதோரிடத்தில் சென்று பயன் தருதற்கு, ஓர் இடத்தில் ஒருவர்க்கு இட்ட சோறு அப்பொழுது அவ்விடத்தே அறுபட்டாலும், அது பின்னும் மலமாய் நின்று வேறோர் இடத்தில் சென்று பயன் தருதலைத்தான் உவமையாகக் கூறல் வேண்டும்.

### விளக்கம்

'பொருந்தும் உவமை எதுவுமேயில்லை' என்றற்கு அவர், 'அற்ற சோறு மலமாய் வேறிடத்தில் சென்று பயன் தருதலை உவமையாகக்கூறலாம்' எனக் கரவாகச்சொல்லி இகழ்வர் என்க.

சோறு பயனுடைய உயர்பொருளாய்ப் பெரிதும் விரும்பிப் பெறப்படுவதாதலும், மலம் பயனில்லாத இழி பொருளாய்ப்

பெரிதும் வெறுத்து அகற்றப்படுவதாதலும் வெளிப்படையாதலின், 'சோறு மலமாய் வேறிடத்தில் சென்று பயன் தரும் என்றலும் பொருந்தாக் கூற்றே' என்பது கருத்து. இவ்வுவமையை ஆசிரியர் சுபக்கத்துள் மீமாஞ்சகரைத் தாம் மறுத்தற்குக் கூறுமாறு காண்க.*

"இட்ட இடம்' என்பதில் நிலைமொழியின் ஈற்று அகரம் தொகுத்தலாயிற்று. ஒய்தல் - இளைத்தல். வழக்கு - முறைமை. இஃது ஆகுபெயராய், அதனையுடைய பொருள்மேல் நின்றது. வைத்தாய் - நிறுவினாய். 'நன்று' என்பது குறிப்பெச்சம். 'நன்று' என்றல் இகழ்ச்சிக் குறிப்பு. (8)

20. உருவமும் உணர்வும் செய்தி ஒத்திரா கன்மம் என்னில்
மருவுகை விரல்கள் தம்மின் வளர்வுடன் குறைவுண் [டாகி
வருவதிங் கென்ன கன்மம் செய்துமுன்? மதியிலாதாய்!
பெருகுபூ தங்கள் தம்மின் மிகுகுறைப் பெற்றி யாமே.

## இதன் தெளிபொருள்

'கன்மம்' என்பது இல்லையாயின், ஒத்த பிறப்பினராய மக்களுள்ளும் சிலர்க்கு உறுப்புக் குறையில்லாத நிறைவும், அழகும், அளவான உயரமும் உடைய உடம்பும், சிலர்க்கு உறுப்புக் குறையும், அழகின்மையும், குறுமை நெடுமையான உயரமும் உடைய உடம்பும், சிலர்க்கு நுண்ணுணர்வும், சிலர்க்கு மந்த உணர்வும், சிலர்க்குச் செயல் திறனும், சிலர்க்குச் செயல் திறன் இன்மையும் ஆகிய வேறுபாடுகட்குக் காரணம் யாது எனின், 'இவ் வேறுபாடுகட்கெல்லாம் காரணம் 'அவர் அவர் முற்பிறப்பிற் செய்த கன்மமே' என்பார்க்கும், கையில் உள்ள விரல்கள் ஒன்றுபோல மற்றொன்று இல்லாமைக்கு அவை முற்பிறப்பிற் செய்த கன்மம் காரணம் அல்ல; பூதங்களின் சேர்க்கை இடத்து அவற்றின் கூடுதல் குறைதல்களாகிய அளவே காரணம்' என்பது உடன்பாடு. ஆகவே, மேற்கூறிய வேறுபாடு கட்கும் காரணம் அப்பூதங்களின் சேர்க்கை முறையே என்னாது, 'முற்செய்த கன்மம்' என வேறொன்றைக் கருதிக் கொள்ளுதல் நுண்ணுணர்வில்லாத மடவோரது செயலேயாம்.

## விளக்கம்

"செய்தி" என்பதிலும் எண்ணும்மை விரிக்க. 'கன்மத்தால்' என்பதில் உருபு தொகுத்தலாயிற்று. (9)

---

* சூ. 2·18.

(தொடரும்)

# செய்திகள்

## ஸ்ரீ வனதுர்க்காதேவி ஆலயத்தில் வசந்த நவராத்திரி விழா

தருமையாதீனம் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் எழுந்தருளி அருள் வழங்கும் ஸ்ரீ வனதுர்க்காதேவி ஆலயத்தில் 24—3—74 முதல் 1—4—74 முடிய வசந்த நவராத்திரி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

உலக நலனை முன்னிட்டு ஸ்ரீ வனதுர்க்காதேவிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், நவசக்தி அர்ச்சனைரூபமாக லக்ஷார்ச்சனையும், சந்நிதியில் தேவிமாகாத்மிய பாராயணம், அபிராமி அந்தாதி பாராயணம் முதலியனவும் நடைபெற்றன. 2—4—74 செவ்வாய்க்கிழமை லக்ஷார்ச்சனை நிறைவு செய்யப்பெற்று அன்று சிறப்பாக வனபோஜனமும் நிகழ்த்தப்பெற்றது.

நாள்தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி, அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள். அன்பர்கள் பலர் நாள்தோறும் வந்து தேவியைத் தரிசித்து அருள் பெற்றனர்.

## பேரளம், உருத்திரபாதத் தீர்த்தத் திருநாள்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான பேரளம் ஸ்ரீ சுயம்புநாத சுவாமி திருக்கோயிலில் 5—4—74 வெள்ளிக்கிழமை பங்குனி உத்திரத் திருநாளன்று உருத்திரபாதத் தீர்த்தத் திருநாள் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாலை 6 மணிக்குத் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் புலவர், திரு. இரா. செல்வக்கணபதி 'அப்பர் விருந்து' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினர். திருமுறைப் பாராயணமும், இரவு பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாவும் நிகழ்வுற்றன. பேரன்பர்கள் பலர் வந்து தரிசித்தும், சொற்பொழிவினைக் கேட்டும் பயனுற்றனர்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பங்குனி உத்திரத்தன்று பேரளம் திருக்கோயில் வழிபாட்டிற்குக் கழனிவாசல் வழியாக எழுந்தருளினார்கள். அன்று உலக நலங் கருதி சிறப்பாக தருமபுரம் சித்திவிநாயகர், கழனிவாசல்

விநாயகர் மற்றும் 11 விநாயகர் வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. முதலில் தருமபுரம் மேலே வீதியிலுள்ள சித்திவிநாயகர் ஆலயத்தில் சிதறுகாயாக 108 தேங்காய் உடைத்து வழிபாடு நிகழ்த்திய பின்னர் கழநிவாசலுக்கு எழுந்தருளினார்கள்.

கழநி வாசலில் திருக்கோயில் திருமுன்னர் தோரணம் முதலியவைகளால் ஒப்பனை செய்து பூர்ணகும்பம் வைத்து மங்கல இசை முதலியவற்றுடன் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை, திருக்கோயில் அறங்காவலர், பஞ்சாயத்துபோர்டு தலைவர், திரு. சிவவடிவேல்உடையார், திரு. நாகநாத அய்யர் திரு. பாலகிருஷ்ண உடையார் ஆகியோர் வரவேற்றார்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ விநாயகருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சகஸ்ரநாமார்ச்சனையும் செய்வித்து, சிதறுகாயாக 1008 தேங்காய் உடைத்து வழிபாடாற்றினார்கள். அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கி, பேரளம் திருக்கோயிலுக்கு எழுந்தருளி அங்கு சுவாமி அம்பாள் முதலிய மூர்த்திகளுக்கு அர்ச்சனை ஆராதனைகள் நிகழ்த்தி வழிபாடாற்றி தருமைக்கு மீண்டருளினார்கள்.

## திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாச தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைவிழா

திருபுவனம் சந்நிதி வீதியில் உள்ள தருமையாதீனம் 17 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருமூர்த்த ஆலயத்தில் குருபூஜை விழா 11—3—74 திங்கட்கிழமையன்று காலை, மாலை இருவேளைகளிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்புடன் நிகழ்வுற்றது. நண்பகல் மாகேஸ்வரபூசையும், மாலையில் சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன.

மாலை 6 மணியளவில், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வர், திருநெறிச்செம்மல், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் 'பண்டாரசாத்திரங்கள்' பற்றியும், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், திரு. தா. ம. வெள்ளைவாரணம் 'குருலிங்க சங்கம' வழிபாடுகள் பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

அன்பர்கள் பலர் கலந்துகொண்டு குருவருளும் திருவருளும் பெற்றனர்.

## திருபுவனத்தில் உருத்திரபாதத்திருநாள்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 27—3—74 முதல் 5—4—74 முடிய உருத்திரபாதத் திருநாள் மிகச்சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. 27—3—74 அன்று கொடியேற்றமும் 31—3—74 அன்று இடபவாகனக் காட்சியும், 2—4—74 அன்று திருக்கல்யாணக் காட்சியும், 4—4—74 அன்று திருத்தேர்த் திருவிழாவும், 5—4—74 அன்று உருத்திரபாதத் தீர்த்தம் கொடுத்தருளலும் நிகழ்ந்தன. 31—3—74 அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி ஞாயிறுதோறும், ஸ்ரீ சரபேசுவரருக்கு உலக நலங்கருதி நடைபெறும் சகஸ்ரநாமாச் சனுருபமான லக்ஷார்ச்சனை வழிபாட்டையும் நிகழ்த்தி அன்பர்களுக்குத் திருஅருட் பிரசாதம் வழங்கியருளினர்கள்.

31—3—74 அன்று திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் வழிபாட்டில் கலந்துகொண்டு அருச்சனைகள் செய்வித்து தரிசித்து மகிழ்ந்தார்கள்.

28—3—74 வியாழனன்று திருப்பனந்தாள். சிவநெறிச் செல்வர், வித்துவான், திரு. கே. எம். வேங்கடராமையா M. A., அவர்களும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன் அவர்களும் முறையே 'சமய வரலாறு' பற்றியும், 'சமய வாழ்வு' பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

29-3-74 வெள்ளியன்று தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைமணி, திரு. சி. அருணைவடிவேல் முதலியார் 'சமய விரதங்கள்' பற்றியும் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி M A, 'சமயச் சின்னங்கள்' பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

30 4—74 சனிக்கிழமையன்று மன்னன்பந்தல் அ. வ. அ. கல்லூரி தமிழ் விரிவுரையாளர், செஞ்சொற்கொண்டல், டாக்டர். ந. சொ. சிங்காரவேலன், M. A., P hd., "சமய விழாக்கள்" பற்றிச் சொற்பொழிவாற்றினர். பின்னர் மாயூரம் ஸ்ரீ கணநாதர் ...ரம்மை நாடக சபையினரால் "சிறுத்தொண்டர்" வரலாறு பற்றி பொம்மலாட்டம் நிகழ்த்தப்பெற்றது.

31—3—74 ...ாயிறன்று திருமுறை விழாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவு... நிகழ்வுற்றன. வித்துவான். திரு. க. வெள்ளைவாரணனார் "...முறைகளும் திருக்கோயில் வழிபாடும்"

என்பது பற்றியும் திரு. வி. சா. குருசாமி தேசிகர் "சமய இலக்கியங்கள்" பற்றியும் சொற்பொழிவாற்றினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளால் தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பண்ணிசை வாணர்களின் திருமுறைப் பாராயணத்தோடு யானைமேல் திருமுறைகள் திருவீதியுலா நிகழ்வுற்றது.

அன்பர் பலர் வந்திருந்து தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

## ஸ்ரீ சரபேசுவரர் உற்சவமும் ஏகதின லக்ஷார்ச்சனையும்

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 7—4—74 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீ சரபேசுவரர் உற்சவம் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நிகழ்ந்தது. அன்று காலையில் உலக நலங்கருதி ஏகதின லக்ஷார்ச்சனை தொடங்கி மாலையில் நிறைவு செய்யப்பெற்றது. ஸ்ரீ ல ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கியருளினர்கள். திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகளும் வழிபாட்டில் கலந்துகொண்டு அருச்சனைகள் செய்வித்து தரிசித்து மகிழ்ந்தார்கள். இரவு மின் விளக்குகளால் ஒப்பனை செய்யப்பெற்ற வெள்ளி யிரதத்தில் ஸ்ரீ சரபேசுவரர் திருவீதியுலா நிகழ்ந்தது. பக்தர்கள் வழிபட்டுப் பயன் பெற்றனர்.

## சென்னை சமயப்பிரசார நிலையத்தில் வேளூர் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும்விழா

தருமையாதீனம் சென்னை சமயப்பிரசார நிலையத்தில் வேளூர்க் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா 1—[illegible]—74 அன்று திரு. T. C. A. இராமானுஜம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வேளூர்த் தேவாரம், திருப்புகழ், நாமாவளிப் பாராயணம் நிகழ்த்தப்பட்டது. தலைவமையுரைக்குப் பின்னர், வந்திருந்த அன்பர்கட்குச் சந்தனக்குழம்பு, விபூதி பிரசாதம் வழங்கப்பட்டது. அன்பர்கள் பெற்று அணிந்து மகிழ்ந்து பயனுற்றனர்.

29—3—74 அன்று வைத்தீஸ்வரன் கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா T. V. கமலசாமி [illegible]A., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வேளூர்த் தேவாரம், திருப்புகழ்,

நாமாவளிப்பாராயணம் நிகழ்வுற்றது. விழா முடிவில் சந்தனக் குழம்பு, விபூதிப் பிரசாதம் வழங்கப்பெற்றது. வந்திருந்த அன்பர்கள் பெற்று அணிந்து மகிழ்ந்து பயனுற்றனர்.

## திருவாசக வகுப்பு

சமயப்பிரசார நிலையத்தில், "திருக்கோயில் ஆசிரியர்" திரு. ந. ரா. முருகவேள் அவர்களால் மார்ச்சு 3, 10, 17, 24, 31 ஆகிய நாட்களில் காலை 9 மணிமுதல் 10 மணிவரை திருவாசகம் விளக்கவுரை வகுப்பு நடத்தப்பட்டது. நகர அன்பர் பலர் வந்திருந்து கேட்டுப் பயன் பெற்றனர்.

## மாதாந்தர சமயப்பிரசார வழிபாடு

சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ வெள்ளீஸ்வரர் திருக்கோயிலில்; நிலைய அன்பர்களின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு 31-3-74 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது. நிலைய அன்பர்கள் சார்பில் விசேஷ அபிஷேகமும் அர்ச்சனையும் நடைபெற்றன. கோயில் பிரசங்க மண்டபத்தில் திரு. S திருநாவுக்கரசு B.A.,B.L., B.T., அவர்கள் சொற்பொழிவாற்றினர். வழிபாட்டில் சென்னை நகர அன்பர் பலர் கலந்துகொண்டு பயனுற்றனர்.

### குத்தாலம் பெரியகோயிலில்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக்கழக முதலாவதாண்டு விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி திருக்கோயிலில், தருமையாதீன முதற்பெருங்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருப்பெயரால் குத்தாலம் அன்பர்களால் தொடங்கப்பெற்று, சிறந்த முறையில் நிகழ்ந்துவரும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக் சழகத்தின் முதலாவதாண்டு விழாவும் மலர் வெளியீட்டு விழாவும் 23—3—74 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு, சிறப்பாக நடைபெற்றன.

கோவை கௌமார மடம் தவத்திரு சுந்தர சுவாமிகள் தலைமை வகித்தார்கள். திருக்கோயில் வழிபாடுகள் முறையே நிகழ்ந்து விழா நிகழ்ச்சி தொடங்கப்பெற்றது.

செயலர், திரு. சி. கோவிந்தராஜுலு வரவேற்புரை கூறினர். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரையைக் கல்லூரி முதல்வர் திரு. வி. சா.

குருசாமி தேசிகர் வாசித்து அளித்தார்கள். தவத்திரு சுவாமிகள் அடியார்களின்சிறப்புக்கள், அவர்கள் செய்த தொண்டுகள் முதலிய வற்றை விளக்கி சரியையாளர் இறைவனைக் கண்டுகளிப்பவர் என்றும் கிரியையாளர் அண்டிக் களிப்பவர் என்றும் யோகியர் மொண்டுகளிப்பவர்என்றும், ஞானியர் உண்டுக்களிப்பவர்என்றும் குறிப்பிட்டுக் கழக வளர்ச்சியைப் பாராட்டி மலரை வெளி யிட்டார்கள்.

முதல்மலரை ஆடுதுறை திரு. சு. சிங்காரம் செட்டியார் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்,

நாகை தமிழ்க்கல்லூரி முதல்வர் திரு. சொ. சண்முக சுந்தரம் எம். ஏ, 'இலக்கியமும் புராணமும்' பற்றி விரிவுரை யாற்றினர். ஸ்ரீ நடேசானந்த சரஸ்வதி சுவாமிகள் 'வானவரும் வழிபாடும்' பற்றி உரையாற்றினர். புலவர் திரு சி. பால சுப்பிரமணியம் நன்றிகூற விழா இனிது நிகழ்ந்தது.

### குடியாத்தம் தீ விபத்தில் பாதிக்கப்பெற்றோர்க்குத்

## தருமையாதீனத்தின் அருட்கொடை

அண்மையில் வடார்க்காடு மாவட்டம் குடியாத்தம் நகரில் அடிக்கடி பெரும் தீ விபத்துக்கள் நிகழ்ந்ததும், அதனுல் நூற்றுக் கணக்கான மக்கள் வீடிழந்து - உடைமைகள் பலவற்றையும் பறி கொடுத்துத் தாங்கொண்ணுத் துயருற்றதையும் அனைவரும் அறிவர்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இவ்விபத்தில் துயருற்ற மக்களுக்கு நிவாரணம் அளிக்கத் திருவுள்ளங்கொண்டு ரூபாய் ஆறுயிரம் மதிப்புடைய வேட்டி, துண்டு, புடவைமுதலிய ஆடைகளை அனுப்பிவைத்திருந்தார்கள்.

இவற்றை வழங்குவதற்காக ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி யில் தருமையாதீனத்தின் சார்பில் வித்துவான், ஸ்ரீமத். மகாலிங் கத் தம்பிரான் சுவாமிகள் கலந்துகொண்டு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கியருளிய ஆசிச் செய்தியை வாசித் தார்கள். அறநிலைய அமைச்சர், மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் அவர்களும், மற்றும் அறநிலைய ஆணையர், ஸ்தல சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் விழாவில் கலந்துகொண்டு பாதிக்கப்பெற்றவர்களுக்குத் தருமையாதீன அருட்கொடையான புதியனவும் பழையனவுமாகிய ஆடைகளை வழங்கினர்கள்.

அமைச்சர் அவர்களும், மற்றும் விழாவில் கலந்துகொண்டோரும் தருமையாதீனத்தின் இப்பேருபகாரத்தைப் பாராட்டியும், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பெருங்கருணைக்கு நன்றி பாராட்டியும் உரையாற்றினர். இப் பெருங்கொடை பாதிக்கப்பெற்ற மக்களுக்குப் பெரிதும் ஆறுதல் தருவதாக அமைந்தது.

---

## தீவனூர், பொய்யாமொழி விநாயகர்

தென்னார்க்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம் தீவனூர் கிராமத்தில் உள்ள இப் பொய்யாமொழி விநாயகர் அடியார்கள் வேண்டிய வரங்கள் பலவும் நல்கிக் கலியுகத்தில் கண்கண்ட கடவுளாக இலங்குகின்றார். இப்பெருமானுக்குப் பொங்கல் நிவேதனம் செய்வதற்கு ஒரு வணிகரிடம், இக்கோயில் பண்டாரம் மிளகு கேட்டார். வணிகர், 'இது உளுந்து, மிளகல்ல' என்று பதில் கூறினர். பின்னர், மிளகெல்லாம் உளுந்தானதால் பெருநஷ்டத்திற்கு ஆளான வணிகன் வருந்தி, கண்கண்ட தெய்வமே! அடியேன் அறியாது செய்த பிழைபொறுத்து ஆட்கொள்ள வேண்டும்' என்று வேண்டிக் கதறினன். வேண்டுவார் வேண்டுவதை ஈபவனுகிய பெருமான் உளுந்தை மிளகாகச் செய்து காத்தருளினன்.

இங்கு, நீர் இல்லாக் குளத்தில் தெப்போற்சவம் நிகழ்த்த ஏற்பாடு செய்ய, கண்டோர் அதிசயிக்குமாறு வானம் இருண்டு மழை பெய்து, குளத்தில் நீர் நிரம்பி தெப்போற்சவம் நிகழ்ந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இப் பெருமான் உறையும் திருக்கோயிலைச் சலவைக் கல்லால் திருப்பணிகள் செய்ய முயற்சிகள் நடைபெறுகின்றன. அன்பர்கள் தங்களாலியன்ற காணிக்கைகளை உதவித் திருவருட்பேற்றிற்கு உரியவர்களாகலாம்.

காணிக்கை அனுப்பவேண்டிய முகவரி :-

காப்டன் V. இராஜகோபால், M. A.,
280/A. பூந்தமல்லி நெடுஞ்சாலை,
அரும்பாக்கம், சென்னை-600029.

---

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

**திரு. K. முத்துஜோதிடர்**

( ஆனந்தஹு சித்திரைமீ 1வ முதல் 31வ முடிய )

( 14—4—74 முதல் 14—5—74 முடிய )

ஆனந்த வருஷம் சித்திரைமீ முதல்தேதி முதல் (14—4—74) ஷை மீ 31உ முடிய (14—5—74) ஸ்ரீ சிவசக்திகளின் அருளால் லோக க்ஷேமத்தின்பொருட்டு, ஸ்ரீ லோகரக்ஷகரான சூரிய பகவான் பிரமாதீசஹு பங்குனிமீ 31வ சனிக்கிழமை பூராட நக்ஷத்திரம் கூடிய சுபமங்கள தினத்தில் உதயாதி நாழிகை 39-22 விஞடிக்கு விருச்சிக லக்னத்தில், சைத்திர விஷு புண்ணிய காலமாக மேஷராசியில் ஸ்ரீ சூரியபகவான் பிரவேசம், செய்கிருர். அதனுடைய பலன் உலகெங்கும் மாதம் மும்மாரி பெய்துகொண்டு தனதான்ய விருத்தியுடன் சந்தோஷகரமாய் பிரஜைகள் ஜீவிக்கவும், தர்மஸ்தாபனங்கள், தேவாலய மடாலயங்கள் ஆசாரிய புருஷர்கள் எல்லோரும், அனுக்கிரஹம்செய்துகொண்டே இருப்பதால்தான் உலகம் செழிக்கும். தேவஸாந்நித்தியம் ஏற்பட்டு ஆனந்தமாகவே வருஷ பலன் பிரகாசிக்கும்.

குறிப்பு :- ஒவ்வொருவரும் சதா ஸ்ரீ பகவானை உபாசித்துக் கொண்டே இருக்க ஸமஸ்த மங்களமும் ஏற்பட்டு சுகமடையும்.

| | | | |
|---|---|---|---|
| புதன் | சூரிய | கேது | செவ் சனி |
| வியா சுக் | வருஷ பிரவேச சக்கிரம் | | |
| | | | |
| சந்தி | ரா / ல | | |

**1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼**

மேஷராசி 9 பாதங்களும், பூர்ணமாக சுபமான பலனையே தரும். தூரதேசத்திலிருந்து அழைப்புப் பத்திரம் வரும். புதிதான முறையில் தொழில் உண்டாகும். குடும்பத்தில் மங்களமான காரியங்கள் நடக்கும். பரீக்ஷையில் ஜெயம் உண்டாகும். வியாதி குணம் அடையும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½**

விருஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். அடிக்கடி தொழிலும், இடமும் மாறிக்கொண்டே இருக்கும். வீண் செலவுகளும் மனஸ்தாபங்களும் உண்டுபண்ணும். காரியங்கள் தவக்கத்துடன் சித்தியாகும். வரவு, செலவு சமமாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾**

மிதுனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். எப்பொழுதும் கவலையைக் கொடுக்கும். செலவுகள் அதிகமாகும். ஸ்தாவர ஜெங்கம சொத்துக்களில் நஷ்டம் காட்டும். சகல காரியங்களிலும் விரோத மனப்பான்மையே உண்டாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

**4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்**

கடகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். சகல காரியங்களும் தவக்கத்துடன் நடக்கும்; பொருளாதாரத்தில் அதிகத் தொல்லைகள் ஏற்படும். புத்திக்கு எப்போதும் சஞ்சலத்தையே கொடுக்கும். தெய்வபலம் முன்னின்று சகலத்தையும் காக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼**

சிம்மராசி 9 பாதங்களும் சுபத்தைத் தரும். உத்யோகத்தில் உயர்பதவி கிடைக்கும். வம்சம் விருத்தியாகும். ஆரோக்யம் உண்டுபண்ணும். படிப்பு விருத்தியாகும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். தெய்வபக்தி அதிகமாகும். எல்லாக் காரியங்களும் நினைத்தபடி சாத்தியமாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

**6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½**

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்ர பலனைத் தரும். மேலோர், பெரியோர்களால் விசேஷமான நன்மைகளும், அடிக்கடி வெளியூர் சஞ்சாரமும், புத்திராதிகளால் நன்மையும், உலகப் பிரசித்திகரமான காரியங்களும் ஏற்படும். வரவு, செலவு சமமாகும். புதன், வியாழன் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். தொல்லை கள் அதிகமாகும். வரவுக்கு மிஞ்சின செலவுகள் ஏற்படும். எப்போதும் உபகாரத்தன்மை இருந்துகொண்டு இருக்கும். எங்கும் கீர்த்தி உண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். ஆரோக்யம் குறையும் எதிர்பாராத சில இடையூறுகள் உண்டாகும். விசேஷமான சில செலவுகளும், நஷ்டங்களும் ஏற்படும் தெய்வபலம் உள்ளவர்களுக்கு எல்லாம் சௌகர்ய மாக இருக்கும் வெள்ளி, சனி சுபமாகும்.

9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். வரவு, செலவு சமமாகும். நினைத்தகாரியங்கள் தவக்கத்தோடு நடக்கும். அதிகமான உழைப்பும், அலைச்சல்களும் ஏற்படும். புதன், வியாழன் சுபமாகும்.

10. மகரம்-உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும், சுலபமான சுபபலனைத்தரும். ஜீவனம் ஓங்கும். தனதான்யம் விருத்தியாகும். மேலோர், பெரியோர்களால் நன்மை உண்டாகும். உலகத்தில் பிரசித்தி ஏற்படும் வெள்ளி, சனி சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½ - சதயம் –பூரட்டாதி–¾

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். இடம் மாறல் ஏற்படும். வரவு, செலவு சமமாக இருக்கும். எதிர் பார்த்த காரியங்கள் தவக்கத்தோடு நடக்கும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

மீனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். ஜீவனம் ஓங்கும். குடும்ப சுகம் அதிகமாகும். எதிர்பாராத சில நன்மை கள் உண்டாகும். தெய்வபலத்தாலும், மேலோர், பெரியோர் களுடைய அன்பினாலும் சகலமும் சாதிக்க முடியும். சுபம் உண்டாகும்.

# ஆனந்த வருஷ பஞ்சாங்கம்

## தருமையாதீனம்
## ஸ்ரீ குருஞானசம்பந்தர் வாக்கிய சைவப் பஞ்சாங்கம்

பஞ்சாங்கம் என்பது ஒருநாளுக்குரிய திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் என்னும் ஐந்து உறுப்புக்களையும் கொண்டு விளங்குவது. இந்த ஐந்து உறுப்புக்களின் நிலைகளையும், கோள்களின் நிலைகளையும் நன்கு அறிந்த பின்னரே மக்கள் தாம் செய்ய எண்ணும் செயல்களில் ஈடுபடுவர். இதற்கு இன்றியமையாது பயன்படுவது பஞ்சாங்கம்.

தருமையாதீனம் வெளியிடும் இச் சைவப் பஞ்சாங்கம், இவ் ஆதீன 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப் பாங்கின் வண்ணம் திருவிடைமருதூர், சோதிஷார்ணவம், பிரம்மஸ்ரீ. K. முத்து சோதிடர் அவர்களால் அகோராத்ர நிர்ணயப்படி திதிகள் சேர்த்து கணிக்கப்பெற்றும், தருமையாதீன வேத சிவாகம பாடசாலை ஆசிரியர், சிவாகம வித்துவான், சிவாகம ரத்நாகரம், சிவஸ்ரீ. சு. சுவாமிநாத சிவாசாரியார் அவர்களால் சிவாகம விதியை அனுசரித்து உத்சவாதிகள் குறிக்கப்பெற்றும் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பஞ்சாங்கத்தில் நக்ஷத்திர தசாபுத்தி அறியும் விபரமும், சூரியன் முதலான ஒன்பது கிரகங்களும், மேஷம் முதலிய பன்னிரண்டு இராசிகளிலும் சுற்றிவரும் (கிரகசார) பலன் விளக்கமும், சிவாகம விதிப்படி நவராத்திரி, சிவராத்திரி, கந்த சஷ்டி முதலிய தேவாலய விழா நாட்களும், விரதங்களும், விஷு, சந்திரகிரகணம், சூரிய கிரகணம் முதலான புண்யகாலங்களும் மற்றும் நாயன்மார்கள் குருபூசை நாட்களும் விளக்கமாகத் தரப் பெற்றுள்ளன.

நல்ல வெள்ளைக் காகிதத்தில், அடக்க விலையில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ள இப்பஞ்சாங்கத்தைச் சைவ நல்லன்பர்கள் பெற்றுப் பயன் பெறுவார்களாக.

தருமையாதீனம் ஞானசம்பந்தம் பதிப்பக வெளியீடு 652. கிரௌன் 1 x 4 அளவு பக்கம் 66. விலை ரூ. 1—25: தபாற் செலவு பைசா. 00—15.

மேலாளர்,
ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமபுர ஆதீனம்,
மாயூரம் 609001. தஞ்சை மாவட்டம்.

மதிப்புரை :

## பெரியபுராண ஆய்வுரை - முதல் தொகுதி

[ ஆசிரியர். திருமுறைச் செல்வர், பேராசிரியர். மறை திரு நாவுக்கரசு அவர்கள். விலை ரூபா. 6-50. சி. 237. சவகர் நகர், அகரம், பெரம்பூர், சென்னை - 82. ]

தமிழிற்கும், சைவத்திற்கும் உறு துணையாய் நின்று தமிழ் மக்களது நெஞ்சில் என்றும் நிலைபெற்று விளங்கும் ஆசிரியர் மறைமலை அடிகளார்தம் திருமகனார், பேராசிரியர், மறை திரு நாவுக்கரசு அவர்கள் தமது நுண்மாண் நுழைபுலத்தின் பயனாகவும், சிவநெறி ஆர்வத்தின் விளைவாகவும் ஆக்கிய பெரிய புராண ஆய்வுரையின் முதல் தொகுதியைப் பல பெருமக்களது உதவி கொண்டு வெளியிட்டுள்ளார்கள். இந் நூலில் சேர்க்கப்பெற்றிருக்கும் அப் பெருமக்களது பட்டியல் ஒன்றே, இவ்வாசிரியருக்குத் தமிழ் உலகிலும், சைவ உலகிலும் உள்ள புகழையும், போற்றுதலையும் அறியப் போதிய சான்றாகும்.

'மகனறிவு தந்தை யறிவு' என்னும் முறையில் தந்தையார்க்கு இருந்த தமிழ்ப் பற்றும், சிவநெறி ஆர்வமும், ஆராய்ச்சி மனப் பான்மையும் இயல்பிலே வாய்க்கப்பெற்ற திரு. மறை. திரு நாவுக்கரசு அவர்கள், மேலும் தமது கல்வி, கேள்வி முதலியவாற்றால் ஆக்கியுள்ள இவ் ஆய்வுரை, ஆராய்ச்சி யுலகிற்கு விருந்தாய் உள்ளது.

இம் முதல் தொகுதியில் சுந்தரரது வரலாறு முழுமையும் ஆய்வுரை செய்யப்பெற்றுள்ளது. வரலாற்றில் பெரிய புராணத்தில் பலர்க்கும் பெரிதும் ஐயப்பாடு தருவன நாயன்மார்களது அற்புதச் செயல்கள். அவை பற்றியும், மற்றும் உலகியலோடு ஒத்து நோக்கும் வழி நாயன்மார்களது வரலாற்றில் தோன்றும் ஐயங்கள் பற்றியும் ஆசிரியர் ஆய்ந்து தெளிவுகாட்டியுள்ளார். இவையேயன்றி ஆய்வுரையாகிய இதனுள் ஏற்ற இடங்களில் திருமுறைப் பாடல்களுக்கு விளக்கம் கண்டிருப்பது மகிழ்ச்சிக்கு உரியதாகும். இன்னோரன்ன வகையில் இவ் ஆய்வு நூல் அறிஞர் பலரும் படித்துணரத் தக்கது.

நூல் அச்சிடுங் காலத்தில் ஆசிரியர் தாமே பிழை திருத்தம் செய்ய இயலாத சூழ்நிலையால் சில எழுத்துப் பிழைகள் நேர்ந்துள்ளமையை அவரே தமது முன்னுரையில் எடுத்துக் கூறியுள்ளார். அடுத்த பதிப்பு வெளிவருமாயின், அப் பிழைகள் நீங்குவனவாகலாம். இவ் ஆசிரியர் தொடர்ந்து செய்து வரும் தமது பெரிய புராண ஆய்வுரையை இனிது முடித்து வெளியிடுவாராக.

— சி. அ.



திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

ஸ்ரீ ஞானம்பிகை உடனாய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில்

# பெருவிழா அழைப்பிதழ்

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையிலாப் பெருங்கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ் குறியாம் சிவலிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் திருநாமம் உற்றதும் ஆகிய சிறப்புக்களை உடையது தருமபுரம். இத்தலத்தில் ஸ்ரீ ஆலவாய்ச் சொக்கநாதப்பெருமான் திருவருளையும், கமலைஸ்ரீஞானப்பிரகாச தேசிகர் அருளையும் நிரம்பப் பெற்றுத் திகழ்ந்த ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், தம் குருமூர்த்திகளது அருளாணையின்படி சைவ பரிபாலனம் என்றும் நிகழ்ந்து வருதற்குரிய ஞானபீடத்தை இங்கு நிறுவிவீற்றிருந்துஜீவசமாதி கூடிய கோயிலே ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில். இதன்கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஞானம்பிகை உடனாய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு நிகழும் ஆனந்த ஆண்டு வைகாசித்திங்கள் 18 ஆம் நாள் (1—6—74) சனிக்கிழமை தொடங்கி பெருவிழா நடைபெறும்.

இந்நாட்களில் " திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடும்-சமயப் பயிற்சி வகுப்பும்" நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக்காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் நலம் பெறுவார்களாக.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்,
கார்பார்
**சொக்கநாதத் தம்பிரான்.**

தருமையாதீன
மடாலயம்
ஆனந்த - சித்திரை

# ஆதி பரமாசாரிய மூர்த்திகள் சரிதம்

பாண்டியநாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் சைவ வேளாளர் மரபில் ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை மீனாட்சியம்மை என்னும் பெற்றோர்க்கு அரும்பெறற் புதல்வர் ஒருவர் சோமவார சுப தினத்தில் தோன்றினார். பிள்ளைத்திருநாமம் ஞானசம்பந்தர் என்பது. இளமையிலேயே கல்வியில் குறைவில்லாது நிரம்பினர். பெற்றோர் தம் ஆன்மார்த்த மூர்த்தியாம் ஸ்ரீ சொக்கலிங்கத்தை வழிபட மதுரை சென்றபொழுது உடன்சென்ற ஞானசம்பந்தர் 'உண்மை அம்மை அப்பர் அங்கயற்கண்ணியும் ஆலவாய் அரனுமே' என்று சொல்லிப் பெற்றோருடன் ஊர் திரும்ப மறுத்து மதுரையிலேயே இருந்தார்.

நாள்தோறும் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கிக் காலந்தோறும் ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டு வந்தார். பொற்றாமரைத் தீர்த்தக் கரையில் சிவனடியார் பலர் நீராண்ட புரோதாயம் ஆடி, தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும் உடையவர்களாய் நாயகன் சேவடி தைவரும் சிந்தையுடன் அமர்ந்து நைந்துருகும் அன்போடு சிவபூஜை செய்தனர். அவ்வடியார்களது செயலில் ஒருநாள் ஞானசம்பந்தரது உள்ளம் ஈடுபட, முற்பிறப்பின்பூஜை உணர்வு அவருக்கு முகிழ்ந்தெழுந்தது: ஆலவாய் அப்பனை, ஆன்மார்த்த மூர்த்தியாகப் பூஜிக்க அளவிலா ஆர்வங்கொண்டு அப்பெருமானை வேண்டினர். அப்பெருமான் அவரது கனவில் தோன்றி, 'முற்பிறப்பில் உன்னால் பூஜிக்கப்பெற்றுவந்த நாம், பூஜைப்பெட்டகத்துடன் பொற்றாமரைத் தீர்த்தத்துள் ஈசானத்திக்கில் இருக்கின்றோம்; மூழ்கிப்பெறுக, என்று அருளிச்செய்தார். ஞானசம்பந்தர் அங்ஙனமே மறுநாள் பொற்றாமரைத்தீர்த்தத்தில் மூழ்கி, ஆன்மார்த்த மூர்த்தியைப் பெற்று ஆனந்தபரவசம் உற்றார். பின், ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில் சென்று; 'பெருமானே, கண்ணுக்கினிய பெருமானாய் என் கரத்தில் வந்த உன்னைப் பூசிக்கும் நெறியை அருள்புரியவேண்டும்' என்று வேண்டினர். அன்று இரவு பெருமான் கனவில் தோன்றி, 'திருவாரூர் ஞானப்பிரகாசனிடம் ஞானோபதேசமும் சிவபூஜையும் பெறுக' என்று பணித்தருளி, ஞானப்பிரகாசரது கனவிலும் சென்று, 'உன்னிடம் வருகின்ற நம் ஞானசம்பந்தனுக்கு விதிப்படி சிவஞானோபதேசம் செய்து சிவபூஜையும் எழுந்தருளப்பண்ணி வைப்பாயாக' என்று சொல்லி மறைந்தருளினர்.

திருவாரூரில் சித்தீச்சரத்தில் தென்முகக் கடவுள் திருமுன்பு சீடரின் வருகையைக் குருமூர்த்தி எதிர்நோக்கியிருந்தார். அருளாணையின்படி ஞானசம்பந்தர், கமலையை அடைந்து குருமூர்த்தியைக் கண்டதும், காந்தம் கண்ட இரும்புபோல் அவர்வசமாகி, சிவதீக்ஷையும், சிவபூஜையும் எய்தினர். அவர் நாள்தோறும் ஸ்ரீ சொக்கலிங்கத்தைப் பூஜித்துப் பாடியதே சொக்கநாதவெண்பா. அவர் செய்த குருதோத்திரமே ஞானப்பிரகாசமாலே. ஒருநாள், ஞானப்பிரகாசர் பூங்கோயில் வழிபாட்டினை முடித்து மீள்கையில், கைவிளக்கெடுப்போன், ஆங்கு இல்லாமைகண்டு, ஞானசம்பந்தர் தாமே அப்பணியினை மேற்கொண்டு செல்ல, சிவத்தியான உள்ளத்துடன் செல்லும் குருமூர்த்திகள் இல்லத்தை அணுகியபொழுது, 'நிற்க, என்று சொல்லி உட்சென்ருர். குருவாணை கடவாத ஞானசம்பந்தர் கைவிளக்கோடு வெளியிலே நின்றிருந்தார். மழைவந்தது; ஓர் அடியும் அப்புறம் பெயர்ந்திலர். மழை அவருக்கு மூன்றடி அப்பாற் சூழ்ந்தே பெய்தது. மறுநாட் காலையில் குருபத்தினியார் கண்டார்; குருமூர்த்தியும் கேட்டுவந்து' 'நீர் குவலயத்திற்கு உண்மை விளக்கும் குருவாயினீர், தனி யிடத்தில் இருந்து உம்மை நாடி ஒடிவரும் காரணர்க்கு உண்மை வைத்து சமய பரிபாலனம் புரிக' என்ருர். சீடர்,

"கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ ?
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ ? இணங்க கார்புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்ர காச சிதம்பர இன்று
உனக்கிச்சை எப்படி ? அப்படி ஆக உரைத்தருளே"

என்று வேண்டினர். அது கேட்டுக் குருமூர்த்திகள், 'தருமபுரம் செல்க' எனப் பணித்தருளினர்.

ஞானசம்பந்தர் அன்றுமுதல் குருஞானசம்பந்தராகித் தருமபுரத்தை அடைந்து சமய பரிபாலனம் புரிந்தார்; ஞான நூல்கள் பல அருளினர்; ஆனந்தபரவசர் முதலிய பலர் வழி ஞான பரம்பரையை உலகில் நிலவச் செய்தருளினர். அவரே தருமபுர ஆதீன ஞானபீடத்தின் ஆதி பரமாசாரிய மூர்த்திகள்.

உ

# திருநாள் விபரம்

| தமிழ் ஸ் மீ உ | இங்கிலீஷ் உ மீ ஸ் | கிழமை | திரு நாள் | திருநாள் விபரம் |
|---|---|---|---|---|
| 17 | 31—5—74 | வெள்ளி | | காலை கணபதி ஹோமம். சித்திரா நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் (மாலை மணி 7-30 to 9-40) தனுர் லக்னத்தில் அனுக்ஞை. விக்னேஸ்வர பூஜை. வாஸ்துசாந்தி, மிருத்ஸங்கிரஹணம் அங்குரார்ப்பணம். ரக்ஷாபந்தனம். |
| 18 | 1—6—74 | சனி | 1 | சித்திரா நக்ஷத்திரம்கூடிய சுபதினத்தில்உதயாதி நாழிகை 2-17க்கு மேல் 7-15க்குள் (காலை மணி 6-55 to 8-55) மிதுன லக்னத்தில் ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி மஹோத்ஸவ துவஜாரோகணம். |
| 19 | 2—6—74 | ஞாயிறு | 2 | கற்பகவிருக்ஷக் காட்சி. |
| 20 | 3—6—74 | திங்கள் | 3 | பூதம், பூதகி, இடும்ப வாகனக்காட்சி. |

வைகாசி ஸ்ரீ

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | 4—6—74 | செவ்வாய் | 4 | நந்தி, காமதேனு, குதிரை வாகனக் காட்சி. |
| 22 | 5—6—74 | புதன் | 5 | சகோபுர ரிஷபவாகனக் காட்சி. |
| 23 | 6—6—74 | வியாழன் | 6 | யானை, அன்னம், ஆட்டுக்கடா வாகனக்காட்சி. |
| 24 | 7—6—74 | வெள்ளி | 7 | இரவு 6 மணிக்குமேல் 7 க்குள் விருச்சிகலக்னத்தில் திருக்கல்யாண வைபவம்; புஷ்பவிமானம், வெள்ளிரதக் காட்சி. |
| 25 | 8—6—74 | சனி | 8 | குதிரை, கிளி, யானை வாகனக் காட்சி. |
| 26 | 9—6—74 | ஞாயிறு | 9 | காலை (மணி 6 - 20 to 8 - 20) மிதுன லக்னத்தில் மஹா ரதாரோஹணம்; திருத்தேர். |
| 27 | 10—6—74 | திங்கள் | 10 | காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல். இரவு துவஜாவரோகணம். |
| 28 | 11—6—74 | செவ்வாய் | | மௌன உற்சவம். |
| 29 | 12—6—74 | புதன் | | சண்டேசுவரர் உற்சவம். |

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

## சிவபெருமான்

சீர்கொண்ட ஆனந்தமாகி எங்கும்
செறிவாகிப் பரமாகித் திரம தாகி
ஏர்கொண்ட கருணைத்திரு வுருவமாகி
எழில்கொண்ட மலைமகளை இடத்திற் கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த னுதிக்
கடவுளர்வந் தடிபரவும் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவன் அடியைத் தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

தருமையாதீனக் குருமுதல்வர்

## ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும் இரு கடைக்கணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன் இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

— சம்பந்த சரணாலயர்.

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு
## முப்பெரும் புராண விரிவுரை

[ 1—6—74 முதல் 11—6—74 முடிய ]

திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம், உயர்நீதிமன்ற நீதிபதிகள் மாண்புமிகு. திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார், பி ஏ., பி. எல்., மாண்புமிகு. திரு. B. S. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்., தமிழக அரசு சட்டமன்றத் தலைவர் புலவர். திரு. கோவிந்தன், மேலவைத் துணைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானக் கிராமணியார், திருமதி. T. N. அனந்தநாயகி, பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ., அகிலஇந்திய வானொலி தென்மண்டல நிகழ்ச்சி அமைப்பாளர் திரு. மீ. ப. சோமசுந்தரம், இந்து சமய அறநிலய ஆட்சித் துறை ஆணையர் திரு. K. S. நரசிம்மன், B. A., B. L., I. A. S திரு S. சிவகுருநாதன் B. A., B. L., முதலியோர் கலந்து கொள்கின்றனர்.

## முப்பெரும் புராணத் தொடர் விரிவுரைகள்

விரிவுரைகள் 1—6—74 முதல் 9—6—74 முடிய
ஒன்பது நாட்களிலும் மாலை 6 மணி முதல் தொடங்கி நிகழும்.

**ஆங்கீரச. பிரம்மஸ்ரீ S. வேங்கடேச சர்மா**
சென்னை.

"கந்தபுராணம்"

**திரு இரா. இராதாகிருஷ்ணன் M. A.,**
பேராசிரியர், தேசியக் கல்லூரி, திருச்சி.

"பெரியபுராணம்"

**ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்**
திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர், யாழ்ப்பாணம்.

"திருவிளையாடற்புராணம்"

## குருபூஜைத் திருநாள்

10—6—74 திங்கட்கிழமை காலை :

சொற்பொழிவுகள் :

திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L.
ஆசிரியர், திருக்கோயில் சென்னை.

" சமயாசாரியர் "

திரு. சங்கரநாராயணன் M. A,
துணைப்பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

" சந்தானசாரியர் "

வித்துவான். திரு. தா. குருசாமி
தமிழாசிரியர், மதுரை.

" ஆதீன முதற்குரவர் "

## குருபூஜை விழா

காலை 9 மணி அளவில்

ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாடு

குருபூஜை விழா அணி மலர் :
பத்தாந் திருமுறை - திருமந்திரம்
( முதல் மூன்று தந்திரங்கள். )

காலை 11 மணி அளவில்

ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் வழிபாடு
( ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருக்கோயில் )

மாலை 6 மணி அளவில்

தருமையாதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
காவிரித் திருமஞ்சனத்திற்கும், குருமூர்த்த வழிபாட்டிற்கும்
எழுந்தருளல்

## பட்டணப்பிரவேசத் திருநாள்

11—6—74 செவ்வாய்க்கிழமை காலை :

சொற்பொழிவு :

திருக்குறள்வேள்
திரு. ஜி. வரதராசப் பிள்ளை பி. ஏ.,
திருச்சிராப்பள்ளி.

" திருமந்திரம் "

காலை 9-00 மணி அளவில்

ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் வழிபாடு

நண்பகல்

மாகேசுவர பூஜை

மாலை 6 மணி அளவில்

இன்னிசை

சீகாழி, திரு. கோவிந்தராசன் குழுவினர்.

இரவு 10 மணி அளவில்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

பட்டணப்பிரவேசம்

## சமயப்பயிற்சி

| நாள் கிழமை | முதல் வகுப்பு காலை 10-00 — 11-00 | இரண்டாம் வகுப்பு காலை 11-00 — 12-00 |
|---|---|---|
| 1—6—74 சனி | " சிவப்பிரகாசம் " திரு. சி. அருணைவடிவேல் முதலியார் | " சிவஞானசித்தியார் " திரு. கு. சுந்தரமூர்த்தி |
| 2—6—74 ஞாயிறு | ” | ” |
| 3—6—74 திங்கள் | ” | ” |
| 4—6—74 செவ்வாய் | ” | ” |
| 5—6—74 புதன் | ” | , |
| 6—6—74 வியாழன் | ” | ” |
| 7—6—74 வெள்ளி | ” | ” |
| 8—6—74 சனி | ” | ” |
| 9—6—74 ஞாயிறு | ” | ” |

# வகுப்பு அட்டவணை

| | மூன்றும் வகுப்பு<br>மாலை 3 - 30 — 4 - 30 | நான்காம் வகுப்பு<br>மாலை 4 - 30 — 5 - 30 |
|---|---|---|
| இடைவேளை | " வேதம் "<br>திரு. பி இராமதாசஐயர். | ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் நூல்கள்:<br>'சிவபோகசாரமும் சொக்கநாதவெண்பாவும்<br>திரு. சொ. சிங்காரவேலன் |
| | " ஆகமம் ".<br>திரு. சுவாமிநாத சிவாசாரியார். | " சொக்கநாதக் கலித்துறையும்<br>ஞானப்பிரகாச மாலையும் "<br>திரு. இரா. செல்வக்கணபதி. |
| | " இதிகாசம் "<br>திரு. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள். | " முத்தி நிச்சயம் "<br>திரு. ச. தண்டபாணி தேசிகர். |
| | " புராணம் "<br>திரு. ஆங்கீரச. வேங்கடேசசர்மா. | " திரிபதார்த்தருபாதி தசகாரிய அகவலும்<br>சோடசகலாப்ராசாத் சட்கமும்<br>திரு. சி. அருணைவடிவேல் முதலியார். |
| | " பத்ததிகள் ".<br>திரு சு. சுவாமிநாத சிவாசாரியார். | " ஸ்ரீ சிவஞானதேசிகர் அருள் நூல்கள் "<br>திரு. வி. சபேசன் |
| | " திருமுறை "<br>திரு. இரா. இராதாகிருஷ்ணன். | " ஸ்ரீ குமரகுருபரர் பிரபந்தங்கள் "<br>திரு. கு. சுந்தரமூர்த்தி |
| | " அறுவகைச் சமயங்கள் "<br>திரு. ச. தண்டபாணி தேசிகர். | " ஸ்ரீ சிவஞான முனிவர் அருள் நூல்கள்<br>திரு. க. வச்சிரவேல் முதலியார் |
| | " நீதி நூல்கள் "<br>திரு. வி. சா குருசாமி தேசிகர். | " படிக்காசுமுனிவர் அருள் நூல்கள் "<br>திருமதி. ப நீலா. |
| | " கல்வெட்டுக்களில் சமயப்பணிகள் "<br>திரு. K. M. வேங்கடராமையா. | " ஸ்ரீ சிவப்பிரகாசர் அருள் நூல்கள் "<br>திரு. ந. ரா. முருகவேள். |

உ
குருபாதம்
தருமையாதீனம்

## கோடைக்கால சமயப் பயிற்சிவகுப்பு

# திருநெறியத் தெய்வத் தமிழ் மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்திருமடத்தில் ஆதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவை யொட்டி 1—6—74 முதல் 10—6—74 முடிய கோடைக்கால சமயப் பயிற்சி வகுப்பும், திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடும் சிறப்பாக நடைபெறவுள்ளன.

சமயப்பயிற்சி வகுப்பு காலை மணி 10 முதல் 12 வரையிலும் மாலை மணி 3-30 முதல் 5-30 வரையிலும் நாள்தோறும் நடைபெறும். சைவசித்தாந்த சாத்திரங்களும், வேதம், ஆகமம், பத்ததி, புராணம்-இதிகாசம் முதலியவைகளும் திருமுறை முதலிய தோத்திர நூல்களும் அவ்வத்துறையில் சிறப்புமிக்க அறிஞர்களால் வகுப்பு முறையில் நிகழ்த்தப்பெறும். கலந்துகொள்ள விரும்புவோர்க்கு உணவும் உறையுளும்அளிக்கப்பெறும்.

பள்ளி இறுதி வகுப்புக்குமேல் பயின்ற செகண்டரி ஆசிரியர்கள், புலவர் பட்டம் பெற்றவர்கள் உயர்கல்வி பெற்றவர்கள் இதில் கலந்துகொள்ளலாம். பயிற்சிபெற விரும்புவோர் தங்கள் பெயர், தகுதி, அலுவல்நிலை முதலியனபற்றித் தெளிவாக எழுதுவதோடு கீழ்க்கண்ட முகவரிக்கு 20—5—74க்குள் விண்ணப்பித்துக்கொள்ளுதல் வேண்டும். இசைவுக்கடிதம் பெற்றபின் அக்கடிதத்துடன் 1—6—74 காலை 7 மணிக்குள் வந்துசேர்தல் வேண்டும். அவரவர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பில் வந்து போதல் வேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்
உத்திரவுபடி,
**வித்துவான். இராமலிங்கத் தம்பிரான்.**

தொடர்புக்கு :

**மேலாளர், தருமையாதீனம்**

தருமபுரம் :: மாயூரம் 609001.